ஆனந்த போதினி
ஜூன், 1927
16

7L
ஜ811, N26AG
N27.2.16
169827




...ாகக்கூடும்.
...பபடி விலக்கு

...ாத்தியமுன புருடனும்.

...ஜகோபால் முதலி...
...சாலைத் தெரு.
...ரைட் ரிஜி...

72
ஜை11, 1926
N27. 2. 16
167227

## விஷய அட்டவணை.

1. ஆனந்த தரிசனம் ... 177
2. தன் பிழைகளை யுணர்ந்து திருந்துதல் ... 181
3. மதிப்புரை ... 186
4. பிரபஞ்ச தரிசனம் ... 187
5. நட்பு ... 191
6. பனிக்கட்டியின் விசித்திரங்கள் ... 193
7. தேகதத்துவசூக்ஷ்மங்கள் .. 196
8. பிரபஞ்ச விநோதம் ... 199
9. விகடப் பிரதாபன்—ஆபவிருத்தி ஆணுக்கா பெணணுக்கா? ...
10. மாதர் மனோரஞ்சிதம்... 2
11. கவிதா விலாஸம் ... 21
12. ஓர் முறையீடு ... 21
13. சென்ற மாதம் ... 215
14. பழமொழி குறிப்புகள்... 219
15. நம்மாழ்வார் காலம் ... 223

## ஆனந்த குணபோதினியின் வருஷ சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா ரூபாய் 1. வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0. தனிப்பத்திரிகை அணா 2.

ஒருவருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயின்டு செய்வதற்குச் சௌகரியமாய் அவ்வருஷ முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

கடிதம் எழுதுகையில் இவ்வருஷம் கொடுத்திருக்கிற தங்களின் புதிய நெம்பரைத் தெரிவிக்காவிடில் பதில் தரப்படமாட்டா. பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெறாதோர் பிரதி தமிழ் மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதாவிடில் அனுப்பப்படமாட்டா. அன்னோர் விலை கொடுத்துப் பெறவேண்டும்.

## ஆனந்த குணபோதினி முதல் வால்யம்.

முதல் வால்யத்தின் 12 ஸஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து நேர்த்தியான முழு காலிகோ பைண்டு செய்துள்ளது. விலை ரூ. **1—6.** 630 பக்கங்களுக்கு மேல் கொண்ட அருமையான அநுபவனுான நூலாகும். விரைவில் எழுதிப் பெறுக.

## நமது நிருப நேயர்கட்கு

☞ பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாஸத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பிப் பெற ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

பத்திராசிரியர், "ஆனந்த குண போதினி" ஸ்ரீரங்கம்.

"ஆனந்த குணபோதினி" க்குச் சந்தாதாராதல், சந்தா அனுப்புதல் சம்பந்தமான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலியவற்றுக்கு தி. இராஜகோபால் முதலியார், "ஆனந்த குணபோதினி" ... ரங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதுக.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆநந்தத்தைத்
தரவல்லதான அநுபவ விநோத நீதிகள் நிறைந்த
உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். "—திருக்குறள்.

கமலம் - 2. Vol. II. | சென்னை : பிரபவ ஆடி 1 | 1927 ஜூலை 15 | இதழ் -16. No. 16.

## ஆநந்த தரிசனம்

" வாமனனைப்போற்ற வாமனனே " என்றொருவர் பாடியிருக்கிறார். இதன் கருத்து இரண்டு விதமாம். ஒன்று, வாமனனாகிய மகா விஷ்ணுவை ஸ்தோத்திரம் செய்ய ஏ மனமே! நீ வந்து சேர். வேறு வியாபாரங்களில் நுழையாதே என்பது. மற்றொன்று, வாமனனாகிய ஸ்ரீஹரியைப் போற்று கிறவன் அந்த ஹரியைப்போலவே ஆய்விடுகிறான் என்பது. அதாவது வைகுண்டபதவியையடைந்து ஸதா ஆநந்தத்தை யனுபவிக்கிறானென்றருத்தம். இக்கருத்தை மற்றவர்களும் தங்கள் மதத்திற்குத் தகுந்தபடி அமைத்துக் கொள்ளலாம். மனிதர்களாகிய நாம் பிரதி நிமிஷமும் கர்மங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆதலின் அதன் பலனையும் நாம் அநுபவித்தே தீரவேண்டும். கருமங்களிற் சில பாபகரமாயும் சில புண்யகரமாயும் இருக்கின்றன. புண்ய கருமங்களைச் செய்தால் சொர்க்காதிபலன்களும், பாப கர்மங்களைச் செய்தால் நரகப் பிராப்தியும் உண்டாம். பாப கர்மங்களில் இரண்டுவிதமுண்டு. ஒன்று ஞானகிருதம். மற்றொன்று அஞ்ஞானகிருதம். நாம் நடக்கும்போது பல எறும்புகள் நமது காலிற்பட்டு மாய்கின்றன. இந்த பாபத்தை நாம் செய்கிறோம். நம்முடைய [illegible] காரியமென்று படுகிற தீவினைகளை யெல்லாம் நாம் விலக்கிக் கொள்ளக்கூடும். அஞ்ஞானகிருதமாய்ப் பிரதிதினமும் செய்யும் பாபங்களை எப்படி விலக்கு

55. தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன் சாமார்த்தியமுள்ள புருடனும்.

வது? ஆதலின் ஸர்வ பாபங்களும் நீங்கும்படி பகவானுடைய பாதாரவிந்தங்களை ஸதா தியானிக்கக்கடவோம்.

***

"சித்த சுத்தி ஸர்வ ஸித்தி." சாஸ்திரத்தில் விதித்துள்ள கர்மங்களெல்லாம் சித்த சுத்தியின் பொருட்டேயன்றி வேறில்லை. பக்தி மார்க்கமும் யோகமும் சித்த சுத்திக்காகவே ஏற்பட்டிருக்கின்றன. கலங்கின தண்ணீரில் நமது நிழலைக் காண முடியாததுபோல் அசுத்த ஹிருதய முள்ளவர்கள் ஆத்மாவைத் தரிசிக்க முடியாதென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆதலின் சித்தத்தை சுத்தமாக வைத்துக் கொள்வ தவசியம். சித்தமானது ஓரிடத்தில் நிலைத்திராமல் எப்போதும் சலித்துக்கொண்டே யிருக்கும் தன்மையுடையது. ஒரு நிமிஷமாவது ஏதாவதொரு பொருளையே நினைத்துக் கொண்டிருப்போமென்று ஆசைகொண்டால் சரிப்படுகிறதில்லை. அந்த ஒரு நிமிஷத்துக்குள் பலவித சித்தவிருத்திகளுண்டாகின்றன. நமது அறைக்குள்ளிருக்கும் அழகிய கிருஷ்ண படத்தையே 5-நிமிஷம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறதென்ற வீர விரதத்தைக்கொண்டு கண்ணை அப்பாற் செல்லவொட்டாமலும் இமைகொட்டாமலும் படத்தையே பார்க்கலாம். ஆனால் அதற்குள்ளாக நம்முடைய மனம் எங்கேயோ தாவிவிடுகிறது. இதை நிறுத்துவதற்கான உபாயம் ஒன்றைத் தேடவேண்டும். சித்தமானது சில சமயங்களில் நல்ல விஷயங்களிலும், பல ஸமயங்களில் கெட்ட விஷயங்களிலும் நாடுகிறது வழக்கம். நாம் நம்முடைய காரியங்களால் நமது சித்தத்தை எப்போதும் நல்விஷயங்களிலேயே பிரவர்த்திக்கச் செய்யவேண்டும். திடீரென்று மனதை ஒரே விடத்தில் நிறுத்துவது அஸாத்தியமாயினும் அதை நல் விஷயங்களில் மட்டும் செலுத்துவது நாளடைவில் ஸாத்தியமேயாம். இவ்விதம் ஸதாகாலமும் நல் விஷயங்களிலேயே பற்றுதல் கொள்ளப் பழகிய மனம் பின்பு பகவானது பாத கமலங்களையும் பற்றுவதற்குச் சுலபமாகிவிடும்.

***

"சேத்தபோதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்" என்றார் பெரியோர். ஒவ்வொரு மனுஷ்யனும் தனது அந்தியத்தில் இதை யறிந்தே செல்லுகின்றான். ஆனால் அப்போது அறிந்து என் செய்ய? நமது ஜீவியம் நமது கைவசத்திலிருக்குங் காலையில் அறிந்தாலன்றோ நாம் அதற்கு ஏற்றபடி திருந்தி உய்யலாம். நாம் அறிவது எப்போது? அதற்கே ஞானம் வேண்டுமென்பது. இந்த ஞானம் எளிதிற் பெறத்தக்கதோ? அதற்கு பகவத்கருணை வேண்டும். அவ்வித கருணையை நாம் பெறுதற்காக ஸதாகாலமும் ஈசுவரத்தியானம் செய்யவேண்டும். சரீர சிரமத்துடன் அகாதமான சுரங்கங்களிலிருந்து விலைபெற்ற நவரத்னங்களை எடுக்கலாம். அநேக இயந்திரங்களைப் புத்திகூர்மையால் கண்டு பிடிக்கலாம். பலவித வஸ்து சாஸ்திரங்களைப் படிக்கலாம். பலர் நிறைந்துள்ள ஸபையில் வர்ஷதாரையைப்போல் பிரஸங்கிக்கலாம். கலாகௌசல பத்யகத்யங்களை நிமிஷத்தில் செய்யலாம். [illegible] தயடைவது சுலபஸாத்தியமல்ல. அது சுரங்கத்திலிருந்து [illegible] யந்திரங்களால் உற்பத்தியாகாது. ஸாதாரண

56. தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற தோன்றலே மகா ராஜனும்.

169827 600 008



மாய்ப் படித்து வாதாடும் சாஸ்திரத்தினாலுண்டாகாது. வெளி வியாபாரங்களை வைத்துக்கொண்டு ஞானார்ஜ்ஜனை செய்ய முடியாது. இவைகளெல்லாம் புத்தி சாதுர்யத்தைக்காட்டும் கீர்த்தியே யன்றி ஞானமார்க்கத்தை யடையக்கூடிய வழியல்ல. ஞானத்துக்கு ஸமானம் இப்புவியில் எந்த வஸ்துவுமில்லை. ஞானத்தாலுண்டாகும் உபயோகங்களின் முன் மற்றவைகள் அல்பமாகும். ஞானிக்குள்ள ஆநந்தம் எத்தகைய பூலோகாதிபனுக்கும் உண்டாகாது. "செத்தபோதிலாருமில்லை" என்ற தெளிவான சிந்தை உண்மையான ஞானிக்கே உண்டாகும்.

***

"கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமருஞ் செல்வமுமிவ் வரசும் யான் வேண்டேன்" என்று வெறுத்து ஞானியானார் ஓர் அரசர். பூமண்டலேசுவரனென்று பெயர்பெற்றவன் ஸதா சத்துரு பயத்தாலும் பலவித விஷயங்களாலும் மனம் நொந்து போகிறான். அவனுக்கு மனச்சாந்தியே யுண்டாகாது. எத்தனை புத்தியிருந்தா லென்ன? மாயையால் மூடப்பட்டுள்ள இவ்வுலகத்தில் ஏதோஸுகம் கிடைத்து விடப்போகிறதென்ற மூடநம்பிக்கையால் மதிமயங்கி ஆத்மார்த்தமான விஷயங்களை மறந்து விஷயாதிகளில் பிரவேசித்துத் திரியும் ஜனங்கட்குக் கணக்குண்டோ? அத்யுத்கிருஷ்டமான ஞானவாரிதியை அறியாமையால் பானம் செய்யாம லிருக்கின்றனர். மகான்களெல்லாம் ஞானத்தை ஆர்ஜிப்பதில் ஏன் மனம் கொண்டனர்? அவர்களுக்கு அபரிமிதமான ஐசுவரியங்களிலும் புத்திர பௌத்திர மித்திராதிகளிலும் ஏன் மனம் செல்லவில்லை? எதற்காக வனவாஸிகளாயினர்? மகா ராஜாக்களுங்கூட "இவ்வரசும் யான் வேண்டேன்" என்று அரசாக்ஷியில் வெறுப்புகொண்டு கானகம் சென்று ஸத்குருவை யாச்ரயித்து ஞானார்ஜ்ஜனை செய்வானேன்? இவைகளால் ஞானத்துக்கு எத்தனை மகிமையுண்டென்பதை அறியலாமல்லவா? சிரேஷ்ட வஸ்துக்களாகிய நவரத்னங்கள் இத்தகைய ஞானத்தைக் கொடுக்குமா? ஞானம் என்பது தனி விஷயம். அது பகவத் கருணையால் நம்மீது வீசப்பெறுவது. திடீரென நம் உள்ளத்தே உதயமாவது. நேற்று ஸம்சார சுகத்திலிருந்தவன் இன்று அனைத்தையும் விலக்கி யாவற்றையும் மறந்தவனாய் விடுகின்றான். இது எதனால்? ஞானப்பிரபை அவன்மீது வீசப்பெற்றதனால். அத்தகைய உத்கிருஷ்டமான ஞானத்தை இப்பிறவியில் நாம் அடைவதற்கில்லையாயினும், அடுத்த ஜென்மத்திலேனும் எய்துதற்குரியவராகும்படி நாம் பகவத் பக்தி செய்யக்கடவோம்.

***

"ஆத்மா சேதனப் பொருள்." சரீரம் ஜடப்பொருள். சர்வ சக்தியான பரமேஸ்வரனுடைய இச்சையினால் தேகமும் ஆத்மாவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. தாயின் சரீரம் புத்திரனுடைய சரீரத்தோடுகூட எப்படிக் கொஞ்சகாலம் சம்பந்தம் பெற்று இருக்கின்றதோ, அப்படியே தேகத்தோடுகூட ஜீவாத்மா சிறிது காலத்திற்கு மாத்திரம் சம்பந்தம் கொண்டிருக்கின்றது. மரண காலத்தில் இவைகளிரண்டும் பிரிந்து விடுகின்றன. மரணத்தினால் ஆத்மா நாசமடைவதில்லை. உண்மையில் ஜகத்தில் எந்த

57. அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்குமவனே மகா புருடனும்.

வஸ்துவும் முற்றும் நாசமடைவது காணப்படவில்லை. மரணத்துக்குப் பின் சரீரம் மண் முதலிய ரூபமாய்ப் பரிணமித்து மாறிவிடுகின்றது.

***

"பேரானந்த முற்றவர்க்கே கண்ணீர் கம்பலையுண்டாகும்." ஈச்வரனுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் பிதா புத்திர சம்பந்தம். ஈச்வரனொருவனே ஆராதனைக்குரியவன். மற்றவர்களெல்லாம் ஸ்நேகத்துக்கும், ஸன்மானத்திற்கும் உபகாரத்துக்கும் தகுந்தவர்கள். பகவத் உபாஸனையே பரமபதத்திற்கு வழி. பரமனையடைய உபாஸனை இன்றி வேறு வழியில்லை. ஈச்வர உபாஸனையானது (1) ஸ்தோத்திரம், (2) வந்தனம், (3) தியானம், (4) அநுதாபம், (5) பிரார்த்தனை என்னும் ஐந்து அங்கங்கள் உடையது. (1) அவற்றுள் ஸ்தோத்திரமாவது:—பகவானுடைய கல்யாண குணங்களைச் சிந்தித்து அவர் பொருட்டு நம் பக்தி சிரத்தைகளைத் தெரிவிப்பதே. (2) வந்தனமாவது:—நம்மையும் நமக்குவேண்டிய ஸமஸ்த பதார்த்தங்களையும் படைத்து நாடோறும் நமக்கு எல்லாச் சுகங்களையும் உண்டாக்குகிற பகவானுடைய அபார கருணையை மனதில் நிறுத்தி அவர் நமக்குச் செய்த நன்றியைத் தெரிவிப்பதே. (3) தியானமாவது:—பகவானுடைய அநந்த திவ்ய மங்கள குணங்களைக் கருதி அவனுடைய ஸந்நிதானத்தை ஞானேந்திரியங்களால் தரிசிக்க எத்தனிப்பதே. (4) அநுதாபமாவது:—ஈச்வரன் விஷயத்திலும், ஈச்வரனின் குடும்பமான விஷயத்திலும் நாம் செய்த அபசாரங்களையும் கருதி மனவருத்த முற்றுப் பரிதபிப்பதே. (5) பிரார்த்தனையோ நம்மைப் பாப காரியத்தினின்றும் விடுவிக்கவும், ஸத்காரியங்களைச் செய்வதற்குத் துணிவைக் கொடுக்கவும், ஆத்ம சாந்தியையும் தூய்மையையும் அநுக்கிரகிக்கப்பெறவும் பகவானை விநய பூர்வமாக வேண்டிக்கொள்வதே. இவ்வழிகளால் பேரானந்த முற்றவர்க்குத் தான் கண்ணீர் கம்பலை யுண்டாகும்.

***

"மன மெனது வசமாக, நினது வச (ம்) நானாக வந்தறிவு தந்தருள்வாய்" எனத்துதித்து, "சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து கரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்து" நாம் செய்த பாவங்களுக்காக அஞ்சித் துக்கிக்கும்போது உண்டாகும் கண்ணீர் தாரைகளே கடவுளுக்கு ஜலாபிஷேகமாம். அசுத்தமான கோரிக்கைகளை விடுகையே கடவுளுக்குப் பலியாம். நன்னடக்கையுண்டாகி பகவதாக்ஞைக்குட்பட்டிருப்பதே கடவுளுக்கு ஸமர்ப்பிக்கும் காணிக்கையாம். அதிவிநயத்தோடும், பிரேமையோடும், செய்தநன்றி யுணர்தலுடன் பூரணமான பக்தி சிரத்தைகளைத் தெரிவிப்பதே கடவுளுக்குச் செய்யும் பூஜையாம். ஆத்மாவை ஈச்வரார்ப்பணஞ் செய்து, மனிதர்களைச் சமமாகவும் ஸகோதரர்களாகவும் பாவித்துத் தானதர்ம பரோபகாரம் செய்து சுகிப்பதே கடவுளுக்குப் புரியும் ஆராதனையாம். உபாஸனை யென்னும் பாசக்கயிறே நம்மை ஈச்வரனோடு பந்திக்கும் தளையாம். ஈச்வர சிந்தனை யென்னும் ஒளியில்லாமல் ஏங்கி, இந்திரிய சுகங்களென்னும் இருளிலுழன்று, அஞ்ஞானாந்தகாரத்தில் மூழ்கி விர்த்தியடையாமல் நசித்துக் கொண்டிருக்கிற நம் ஆத்மாவானது ஈச்வர ஸந்நிதானமென்னும் சுடரொளியிற் புகவே பாப பந்தங்களினின்று விடுபட்டு நித்யானந்தத்தை யடைவதற்குப் பாத்திரமாகும். ஆதலின் நாம் பகவானைப் போற்றக்கடவோம்.

58. அஞ்சாம லெதுவரினு மெதுபோகினுஞ்சித்த மசைவிலான்மகா தீரனும்.

# ஆநந்த குணபோதினி

பிரபவஹு ஆடிமீ 1௳

## தன் பிழைகளை யுணர்ந்து திருந்துதல்

விரிந்த உலகத்தில் தெரிந்தவர் சிலரே. நெறி தப்பினவருக்கு அறிவிப்பது வீண் எனினும், நல்ல நினைவை அனுசரித்தலே கெட்ட நினைவை நீக்குதற்கான வழி என்பதை அடுத்தடுத்துப் போதிக்க வேண்டியது நமது கடமை. தீய குணங்கள் உண்டாகத் தவக்கும்போதே முன் ஜாக்கிரதையா யிருந்து தடுக்க முயலாமல் விட்டுவிடுகிறபடியால், கொஞ்சங் கொஞ்சமாய் அதிசீக்கிரத்தில் வளர்ந்து நன்றாய் நிலைபெற்றுப் பின்பு ஒருவராலும் அசைக்கக் கூடாததாய் வேரூன்றிப் போகிறது. சில விசேஷங்களுக்காகவும் குணங்களுக்காகவும் ஒருவனைக் கொண்டாடுகிற உலகம், பிறகு அதே விசேஷங்களையும் குணங்களையும் தாழ்வுபடுத்திச் சொல்லி இகழவும் துணிகிறது. ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவனுக்கு விசேஷ சாமர்த்தியம் உண்டாயிருந்தால், அந்த விஷயத்தில் அவனுக்குக் குறைந்த சக்தியுள்ளவர்கள் அவனைக் கர்வி யென்றுசொல்லி, வேறோர் குறை குற்றம் காணமுடியாமற்போனாலும் இதையே பெரிதாக அவன் தலையில் சுமத்துவார்கள். தங்களுக்கு அவன் நன்மை ஏதும் செய்யவில்லை யென்கிற ஆத்திர சிந்தையால் உண்டாகிற அகங்கார குணம் இது.

இன்னொருவித அகங்காரமுண்டு. யாவரும் கண்டு மெச்சத்தக்க ஒரு விசேஷம் தங்களிடத்தில் வாஸ்தவமாய் இருப்பதனால், அது பார்ப்போருக்குப் பளிச்சென்று தெரியும்பொருட்டோ, என்னவோ, சிலர் அகங்காரம் கொண்டிருக்கிறார்கள். இந்த அகங்கார குணத்தை அவர்களுக்கு ஏற்றிவைத்தது உலகமே. உண்மையாகத் 'தக்கோர்கள்' என்கிற உயர்ந்த கௌரவநிலைக்கு அவர்கள் பொருத்தமற்றவர்களா யிருந்தும் உலகத்தார் அவர்களை உயர்வுடையோராகத் துதிக்கத் தலைப்பட, அதில் அவர்கள் தங்களுக்குச் சரிசமானமானவர்கள் இல்லை யென்று நினைத்துக்கொண்டு அகங்காரிகளாகிவிடுகிறார்கள். இத்தகையோர் வெளிக்கு எப்படி வேஷம் போட்டாலும் ஒவ்வொருவருக்கும் தம்முடைய யோக்கியதை இவ்வளவென்று உள்ளூரத்தெரியுமென்பதற்குச் சந்தேகமில்லை. நியாயமாகவோ அநியாயமாகவோ கர்வம் தலைக்கொண்டு நம்மிலும் மேல் யார் என்று அவர்கள் கொள்ளுகிற அகங்காரத்திற்காக அவர்களை முற்றிலும் பழிப்பதற்கும். சாத்தியப்படுகிறதில்லை. ஏனென்றால் அவர்கள் அவ்விதம் கர்விக்கும் குற்றத்திற்கு உடந்தையாயிருந்து அதை ஆதரித்து மற்ற ஜனங்கள் பலப்படுத்துவோராக ஆகிறார்கள். ஆகவே குற்றம் அகங்காரப்படுகிறவர்கள் பக்கம் ஒரு பாதியும், அவர்களைத் தூக்கிவைத்து சிலாகித்த உலகின் பக்கம் மற்றொரு பாதியுமாக இரு பக்கத்திலு மிருக்கின்றது.

59. தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத துரையே மகாமேருவாம்.

யாருக்கு மரியாதையும் கௌரவமும் தகுதியோ அவர்களைமாத்திரம் புகழ்ந்து கொண்டாடாமல், மூடர்களையும் சுயநலப்பிரியர்களான வஞ்சகர்களையும் அப்படியே கொண்டாடுவதனால் அவர்களுக்கு அகங்காரத்தை நாமே உண்டுபண்ணுகிறோம். ரசமற்ற கவி பாடுகிறவர்கள், தொண்டை கிழிய ராகம் போடுகிறவர்கள், சித்திரவேலைக்காரர்களென்று சுவரில் தோன்றியபடி வர்ணமிடுபவர்கள் முதலான பேர்களைக் கண்டால் நமக்கு மிகவும் அசங்கியமாயிருந்தும் நாலுபேருக்கு எதிரில் மனச்சாட்சிக்கு நேர்விரோதமாய், மிகவும் நேர்த்தியாய் இருக்கின்றது, எவ்வளவு அழகாயிருக்கின்றது, எத்தனை திவ்யமா யிருக்கின்றது என்று பலவித சிறப்புச் சொற்களாலே அவர்களுடைய வேலைப்பாட்டைப் புகழவேண்டி யிருக்கிறது. ஜனத்தலைவரென்று சொல்லிக்கொள்ளும் சிலரைப்பற்றி நமக்கு எவ்வளவோ அருவருப்பா யிருப்பினும் அதை வெளியிடப் பின்னடைந்து மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களைச் சிலாக்கியப்படுத்தி ஒத்துப்பாடவேண்டி வருகிறது. இப்படியே பல சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கொருவர் கடூரமா யிராமல் சாவதானமாயும் மரியாதையாயும் நடந்துகொள்வதின்பொருட்டு எத்தனையோ பொய்கள் சொல்லவேண்டி யிருக்கிறது. இந்தப் பொய்கள் தகுதியற்றவர்களை அகங்காரத்தின் உச்சிக்கு ஏற்றுவதற்கான ஏணியாக முடிந்துவிடுகின்றது.

நாம் வீட்டில் வேலையா யிருக்கும்போது நம்முடைய நண்பன் ஒருவன் —“நான் வருவது உங்களுடைய வேலைக்குத் தடையோ என்னவோ”— என்று சொல்லிக்கொண்டே வந்தால், அப்போது நாம் மனதில் ‘இவன் நம் வேலையைக் கெடுக்க வருகிறான்’ என்று எண்ணிக்கொண்டபோதிலும், மேலுக்குச் சிரித்துக்கொண்டு தடை முதலிய ஒன்றுமில்லை, தாராளமாக வரலாம், உங்கள் வரவு கிடைக்கத் தகுந்ததாவென்று சொல்லுகிறோமல்லவா? இப்படிச் சொல்லாமல் உண்மையை அவனுக்குத் தெரிவித்தால் அவனுடைய மனதுக்கு வருத்தமா யிருக்கும்; அப்படிச் செய்கிற நம்மிடத்தில் ஒருவனும் நெருங்கி சிநேகம் பாராட்டமாட்டான். இங்ஙனமாக மரியாதைக்காகப் பொய் சொல்லும்படி நேரிடுவதுமல்லாமல் பிரீதிக்காகவும் சொல்லவேண்டி வருகிறது. நம்முடைய அன்புள்ள சிநேகிதன் ஒருவன் பாட்டுப் பாடினாலும், மற்றேதாகிலும் ஒன்று செய்தாலும், அதைக் கண்டு சிலர் தெரியாமையினால் புகழ்வதும் சிலர் விசுவாசத்தினால் அவனைக் கொண்டாடுவதுமா யிருக்கும்போது நாம் மாத்திரம் வேறாகப் பிரிந்து அது நன்றன்று என்று சொல்லி அவனை ஆயாசப்படுத்துவானேன், வாய்ப்பேச்சுக்குக் கருப்பென்ன என்று நினைத்து நாமும் மற்றவர்களுடன் சேர்ந்து அவனைச் சிறப்பாகப் பேசுகிறோம். இந்தச் சிறப்பான பேச்சுகளாலேயே பின்பு உலகத்தார் அவனைத் தவறுதலாகக் கௌரவிக்கும்படி நேர்ந்துபோகிறது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், ஒருவனுக்கு அகங்காரத்தை உண்டுபண்ணி அதற்கு இடம் கொடுப்பவர்களும் உலகத்தாரே; அதைப் பிறகு குற்றமாகக்கொண்டு தூஷிப்பவரும் உலகத்தாரே. எனவே, அகங்கார சிந்தை கொண்டுள்ள ஒருவன் உலகம் தன்னைப் புகழ்வது ஒப்புக்கேயன்றி உள்ளபடியல்லவென்றும், உலகப்புகழ்ச்சி ஒருபோதும் நிலையற்றதென்றும் தெரிந்து அடக்கமான தன்மைக்குத் தன்னைப் பயிற்றுவித்துத் திருத்திக்கொள்ள வேண்டும். அதுவே உலக மயக்கத்தி

60. அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த்த திரட்சிக்கு மவனே மகாத்யாகியாம்.



லின்றும் விழித்து எழுந்து தெளிவு பெற்றுக்கொள்ளுகிற பெரிய புத்திமதியும் ஞானமுமாகும். மற்றொன்றும் செய்யலாம்; தனக்கு இல்லாத குணங்களை இருப்பதாக உலகம் தவறுதலாய்ப் புகழ்ந்து கொண்டாடுகையில், அந்த இல்லாத குணங்களையும் இனி தன்னிடத்து உண்டாகும்படி தன் செயல்களை உயர்த்திக்கொண்டு, தனக்குக் கிடைத்த புகழ்மொழிக்குத்தான் தகுதியுடையோனாகவும் தன்னை ஆக்குவித்துக்கொள்ளலாம். இவ்விதம் திருந்தும் தன்மையோர் என்றும் சிரேஷ்டாஸனத்தில் வீற்றிருத்தற் குரியோராவர்.

இவ்விதமே கோபதாபங்களின் சம்பந்தமாகவும் தன் பிழைகளையுணர்ந்து திருந்துதற்கான சில யோசனைக் குறிப்புகளை இங்கு உதஹரிக்க விரும்புகின்றோம். அவற்றின்படி நடக்க முயல்வாராயின் உலகம் அன்னோரை என்றும் போற்றித் துதிக்கும். பிழையே செய்யாத ஒருவன் இருப்பது அருமை. ஆயினும், பிழைபாட்டிற் சிக்கிப் பின்பு தன்னைத் திருத்திக்கொள்வோன் சிலாக்கிய பூஷணனாகவே பாராட்டப் படுவான்.

உனக்குக் கோபாவேசம் உண்டாகிறதா யிருந்தால் அதற்குப் பரிகாரம் ஒன்று கேள். பெரிய வனங்களுக்குப் போய் அக்கம்பக்கத்தில் ஒருவருமில்லாததாய் மையமான ஒரு இடத்தில் நின்று, அச்சமின்றி உன் அபிப்பிராயங்களைக் காற்றுடன் சொல்லிக்கொள். அப்படிச் செய்யுமிடத்து உன் கோபத்தால் ஒருவரும் மனம் நோவமாட்டார்கள். அன்றியும் யாவரையும் தூஷித்து வாயை அடக்கினேனென்று வீம்பு பேசவும் இடம் இராது.

சோம்புந்தன்மை மேலிட்டிருக்கும் பக்ஷத்தில் ஒரு கடிகாரத்திற்குச் சமீபத்தில் போய் நின்றுகொண்டு அது “டிக்” “டிக்” என்று அடிக்கிற சத்தத்தை இரண்டு மணி நேரம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தால், காலம் எவ்வளவு சீக்கிரத்தில் கழிகிறதென்று எண்ணி, உடனே உன் சோம்புதலான மேற்போர்வையை வாங்கி வைத்துவிட்டு, ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குவாய்.

வீண் செலவு செய்து தறிதலையாகத் திரிகிறாயா? சிறைச்சாலையையாவது கஞ்சித் தொட்டியையாவது நாடி, அங்கே நடப்பதைச் சற்று யோசித்துப் பார். பார்த்தால் காற்றை விதைப்பவன் கடுங்காற்றை அறுக்க வேண்டுமென்றும், படுக்கையில் முள்ளை இறைப்பவன் அம்முள்ளின்மேல் படுக்கவேண்டி யிருக்குமென்றும் உணர்வாய்.

செருக்கும் அகங்காரமும் மேலிட்டிருப்பின் அதனின்றும் திருந்துதற்கான வழியை மேலே தெரிவித்துள்ளது. அத்துடன் இதையும் கேள். ஒரு மயானத்துக்கு நீ உடனே செல். சென்று அங்கு ஒவ்வொரு கோரியின் மீதும் செதுக்கப்பட்டிருக்கும் அக்ஷரங்களைப் படித்துப் பார்; அப்பொழுது மனுஷ்யன் எவ்வளவு உன்னத ஸ்திதியிலிருப்பினும், அவனுடைய முடிவு இன்னதென்று திட்டமாய்த் தெரிந்துகொள்வாய்.

உள்ளது போதுமென்று இராமல் எப்பொழுதும் குறைகூறுகிற துற்குணத்தை யடக்கித் திருத்திக்கொள்ள நினைக்கிறவர்கள், மூடமாயாவது, தீராப்பிணியாலாவது, சித்தப்பிரமை கொண்டாவது, வறுமையினாலாவது

61. அவரவர் தராதர மறிந்து மரியாதைசெயுமவனே மகா வுசிதனாம்.

வருந்துகிற நிர்ப்பாக்கியர்களைப் பார்ப்பார்களானால், அப்படிக்கொத்தவர்களுக்கு முன் தங்களுடைய வருத்தம் திருணமாத்திரங்கூட இல்லையேயென்று சொல்லித் தங்களெண்ணத்திற்கு நாணித் திருப்தியடைவார்கள்.

பொறாமையும் பேராசையும் குடிகொண்டு வருந்துகிறவன், உயர்ந்த நிலையிலுள்ள செல்வவான்களைக் கவனித்து ஆராயக்கடவன். அச்செல்வவான்களில் பலருக்குப் பசியே யிராது. சொற்பமாகவே புசிப்பினும் ஜீரணித்துக்கொள்ளத் திறனின்றி வாதைப்படுவர். பலர் தீராப்பிணிகளால் வருந்தி மெலிவர். சிலருக்குப் புத்திரபாக்கியமே சூன்யமாயிருக்கும். சிலருக்கு அவர்களால் விரும்பப்பட்டவர்களெல்லாம் மடிந்து, வெறுக்கப்பட்டவர்களையே இப்போது நம்பிக் காலம் கழிக்கவேண்டியதாய்த் தலைவிதி ஏற்பட்டிருக்கும். இன்னும் சிலருக்குப் பத்தினி பாக்கியமே நிலைத்து நீடிக்காமல் ஒன்றுக்குப்பின் ஒன்றாக பல விவாகங்கள் செய்துகொண்டு திருப்தியற்றுக் கிடப்பார்கள். ஏராளமான செல்வமிருந்தும் வீட்டில் மனோசமாதானம் இன்றித் தத்தளிப்பார்கள். இவ்விதமான ஐச்வரிய ஸம்பன்னர்களைவிட ஏழைகளின் நிலைமை எவ்வளவோ மேலென்று நீ கண்டுகொள்வாய். அன்றியும் எத்தனை பெயர் செல்வத்தாலும் புகழ்ச்சியாலும் மமதையடைந்து அழிந்துபோனார்கள்? இவற்றையெல்லாம் யோசிக்குந்தோறும், உன்னுடைய ஸ்திதி எவ்வளவு மேலானதென்றும், பிறருடைய செல்வத்தைப் பார்த்துப் பொறாமைப்படுதலாவது, இன்னும் அதிகம் வேண்டுமென்று துராசைப் படுதலாவது என்ன புத்தியீனமென்றும் அறிந்துகொள்வாய்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க."

நமக்கு ஈடு, இணை யாரேனும் உண்டா? நம்மளவு தெரிந்தவர் யார் இருக்கிறார்கள்? என்கிற வீண் பெருமை ஒருகால் உனக்குத் தோன்றலாம். அப்படியானால் பெரியோருடைய அநுபவத்தை ஆராய்ந்து பார். அதிக ஞானவான்களும் திறவான்களும் வெகுகாலம் சிரமப்பட்டுக் கடைசியாய்,

"கற்றதுகைம் மண்ணளவு கல்லாதுலகளவு"

என்ற செய்யுளின் கருத்துக்கிணங்க, நாம் கற்றது எம்மாத்திரம்? நாம் கற்கவேண்டியது எவ்வளவு அபாரம்! என்று கருதி நீறுபூத்த நெருப்பையும், கரித்துணியில் முடிந்த மாணிக்கத்தையும் ஒப்ப ஒன்றும் தெரியாதவர் போல் அடங்கியிருந்ததைச் சிந்தித்து உணர்ந்திடுக. மேலும் எப்படி ஒரு பிரபல வர்த்தகன் தன் சரக்குகள் எல்லாவற்றையும் நாலு பேருக்கும் கண்ணில் படும்படி வெளியில் எடுத்து வையாமல், சாதாரணமான சிலவற்றை மாத்திரம் கண்ணுக்கெதிரே வைத்துவிட்டு மற்ற விலையுயர்ந்த சரக்குகள் எல்லாவற்றையும் உள்ளே பத்திரமாய் வைத்திருந்து, விலைக்காரர் வந்து கேட்டதின்மேல் எடுத்துக் காட்டுகிறானோ, அப்படியே தெரிந்த நிபுணர்களும் தங்களுடைய கல்வியை மனதிலேயே வைத்திருந்து, தகுந்த சமயம் வாய்க்கும்பொழுது மாத்திரம் மிகுந்த அடக்கத்துடன் எடுத்துக்காட்டித் தங்களின் வித்தியா வைபவத்தைப் பிரகாஸப்படுத்துவார்கள். அவர்களைப் பார்த்து அவ்விதமான பணிந்த தன்மையில் நீயும் அமரப் பயிற்சி செய்துகொள்.

---

**62. சீலமுடை யோர்களைச் சேரவேண்டும், பிரிதல் செய்யாதிருக்கவேண்டும்**



நீ அடக்கக்கூடாத அதிகார ஆசையுடையவனாய் இருந்தால் மிக்க பிரஸித்திவாய்ந்த அரசர்கள் அதிகாரிகள் முதலானவர்களுடைய சரித்திரங்களைப் பரிசோதித்துப் பார். எந்தச் சரித்திரத்தைப் பார்ப்பினும், உயர்பதவியும் கீர்த்தியும் உழைப்பினாலும் விடாமுயற்சியாலும் சித்தித்ததாகத் தெரியவருமேயொழிய, அதிர்ஷ்டத்தாலும் தற்செயலாலும் உண்டானதென்று காணாய். ஆகவே, ஜயிக்கவிரும்புவோன் சண்டைசெய்தாலொழிய ஜயமடையான். உயர்ந்த மலையுச்சிக்குப் போகக் கருதுவோன் வருந்தித் தொத்தித் தொத்தி ஏறினாலொழிய அவ்விடம் சேரான். அதுபோல் புகழ்பெற விரும்புவோன் சிறிதுசிறிதாக உலகுக்கு இதம் செய்துவரவேண்டும். முடிவில் இது பிரஸித்திக்கான பாதையில் கொண்டுவந்துவிடும்.

சந்தேகம், அதைரியம், பயம் முதலியவற்றினின்று விலக வகையென்னவென்றால், சர்வ வல்லவராகிய கடவுள் உழைக்கிறவர்களுக்கு உதவி செய்வார் என்பதை யுன்னி, உன்னால் கூடியதையெல்லாம் சிரமப்பட்டுச் செய்து, அவருடைய ஒத்தாசைக்கும் ஆசிக்கும் பாத்திரனாக முயல்வதேயாம். கடவுளின் அருள் உனக்கு வேண்டுமாயின் உன் பிழைகளையெல்லாம் உணர்ந்து நீ உன்னைத் திருத்திக்கொள்ளவேண்டியது உனது முதல் வேலையாக இருக்கவேண்டும். உன் உள்ளம் அவரைப் பூரணமாய் நம்பிக் களங்கமற்று விளங்கவேண்டும். இப்படிச் செய்வதை விட்டுச் சோம்பி அஜாக்கிரதையா யிருந்து, மனதுநிரம்ப ஞானமும், பெட்டி நிரம்பப் பணமும், வேண்டுமென்றால் கிட்டுமா? நீதான் உத்தமனாகவாவது முடியுமா? ஒரு போதுமில்லை. மேலும் கடவுள் தமது காசுக்கடையில் வருகிற சோம்பேறிகளுடையவும், தமது பிழைகளை யுணர்ந்து திருத்திக்கொள்ளாதவர்களுடையவும் உண்டி சீட்டுகளுக்கெல்லாம் பணம் கொடாமல், உழைப்பாளிகளும் தங்களைத் திருத்திக்கொண்டவர்களுமே கொண்டுவருகிற உண்டியை மாத்திரம் மதித்துச் செலாவணியாகும்படி ஏற்படுத்தியிருக்கிறார். ஆகவே, இன்று முதல் நம்மைத் திருத்திப் பண்படுத்திக்கொள்ளக் கடவோம். ஒன்றும் செய்யாமலே நம்முடைய நாட்கள் கழிகின்றனவென்றும்; எது காரியமோ, எது நாம் செய்யவேண்டிய கடமையோ அதைச் செய்யாமலே காலத்தைக் கழித்துவிடுகிறோமென்றும் ஒரு பெரிய வித்வான் சொல்லியிருக்கிறார்.

## அற்ப ஸந்தோஷம்.

கள்ளைக்குடிப்பதும், சூதாடுவதும், வியபசாரம் செய்வதும் திருடுவதும், பிறருக்குத்தீங்கிழைப்பதும் அந்தவேளையில்சுகமாகத் தோன்றி, சில நிமிஷங்கட்கெல்லாம் மகத்தான வேதனையை விளைக்கும். ஐயோ! ஜனங்கள் இந்தப் போலி ஆநந்தத்திற்காக என்ன பாடு படுகிறார்கள்!

---

63. செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டுங்கொண்டு த்யாகங் கொடுக்கவேண்டும்.




### திருவள்ளுவநாயனர் பஞ்சரத்தினம்.

உயர்திரு சண்முகானந்தசாமிகளால் குறிப்புரையும் மூகவுரையும் சேர்த்துப் பதிப்பிக்கபட்டது. விலை ரூபா2. இது 500 பாடல்கள் ரூபமாய் அமைந்தது. வாதம், வைத்தியம், கற்பம், யோகம், ஞானம் பயில்வாருக்கு இந்நூல் உதவியாகு மென்றும், வெகுபொருட் செலவில் இதன்மூலப் பிரதி கிடைத்து அச்சியற்றபட்டதென்றும் மூகவுரையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பாடல்கள் மிக்க எளிய நடையில் அமைந்துள்ளன. ஆயினும் அவற்றின் பொருளோ கேட்டறிந்தே தெளிதல் வேண்டும். சாமான்யர்கட்கு இதன்பொருள் விளங்குதல் அருமை. இந்நூல் 60-வருஷங்கட்கு முன்னர் ஒரு பதிப்பு பதிப்பிக்கப்பட்டதென்றும், அதன் பிறகு இதுவே மறு பதிப்பென்றும் அறிகிறோம்.

### பூஜா பாகவதம் :—

நித்திய பாராயணத்திற்கேற்றதாய் நன்கமைந்த சிறியநூல். விலை அணு 1. ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி ஸர்மா அவர்கள் இயற்றியது.

### போலீஸ்கிலி போதிரார்:—

ஒரு சிறிய துப்பறியும் நாவல். அணு2. ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி ஸர்மா அவர்கள் இயற்றியது.

### சுந்தரவதனி :—

ஒரு துப்பறியும் தமிழ் நவீனம். மருதூர் ஸ்ரீமான் A. பிரபாகர சாஸ்திரி அவர்கள் பி, ஏ. இயற்றியது. விலை அணு 12. இதில் கஜபதியின் துப்பறியும் சாகஸம் எவர் மனத்தையும் கவரவைக்கும். வெகு பரிதாபமான வாழ்வில் ஜமீன்தாரான வீரஸிம்ஹர் தமது ஒரே குமார்த்தியான சுந்தர வதனிக்குத் தமது ஜெமீனை உரிமையாக்கிக் காலமாகிறார். அந்த உயில் வெகு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டுளது. உண்மையான பணியாளனாகிய மல்லாரெட்டி எதிரிகளால் ஏமாற்றப்பட்டுச்சித்தப்பிரமை கொள்கிறார். துப்பறிபவராகிய கஜபதி கடைசிவரையும் மல்லா ரெட்டியை நேசித்து அவர் மூலமாக சில ரகசியங்களை ஊகித்தறிந்து, கதாநாயகியையும் கண்டுபிடித்து, மந்திரவாதியாக மாறி உயில் இருக்கும் இடமும் அறிந்து மிக்க பிரயாசையுடன் துஷ்டர்களைக் கைதியாக்கி, கதாநாயகிக்கு ஜமீன் கிடைக்குமாறு செய்துவிடும் அற்புதம் படித்தறிந்துதான் ருசிக்கவேண்டும். திக்கற்றவர்க்குத் தெய்வமேதுணை எனும் நீதி இந்நாவலால் நன்கு விளங்கும்.

☞ இப்புஸ்தகங்கள் "ஆநந்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.

64. ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்நாட்டி னன்றாய் நடத்த வேண்டும்.




சில தேசத்தார்களுக்கு அக்கினியே அகப்படுவதில்லை. அவ்விதம் கிடைத்தாலும் சமையல் செய்யப் போதுமானதா யிருப்பதில்லை. திபேத், ஐஸ்லாண்ட், ஆசியா, அமெரிக்காக் கண்டங்களின் உத்தர பாகங்களி லிருப்போர் கதி இதுதான். வேறு சிலரோ அக்கினி ஸாதனம் அகப்பட்டாலும், சோம்பலை மேற்கொண்டு கஷ்டப்பட்டு நெருப்பு மூட்டிப் பாகம் பண்ணுவதை விட்டுவிட்டு, பலவகையான மாம்சங்களைச் சீவல் சீவலாய் அறுத்து வெயிலிலுலர்த்திப் புசிப்பார்கள். தென் அமெரிக்காவில் லாப்பிளாட்டா மாகாணததில் வசிக்கும் குவாக்கஸ் என்பவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். நிலக்கரி, சுடுகரிகளினுல் உண்டாகும் அனலினும் விறகினுல் பிறப்பது பாதிதான்.

***

பிரதாப சிங்கு வடசிற்றூரையாண்ட ரஜபுத்ர அரசரில் ஒருவர். இவர் சிம்மாசனம் ஏறினவுடனே தன் நாட்டின் எல்லைக்கு அருகிலிருந்த ஓம் தாளம் என்ற பெயர்போன கோட்டையை ஆக்பருடைய ஆதீனத்திலிருந்து கைக் கொண்டார். இந்த சங்கதி ஆகபருடைய காதில் நாராசம்மேற்றினதுபோல நுழையவே திரளான சேனையைக்கூட்டி ப்ரதாப சிங்குடன் கொடும் போர் விளைத்து ரஜபுத்ர நாட்டைக் கைக்கொண்டு அவர்களுடைய அரசனையும் ஊரைவிட்டுத் துரத்தியபோதிலும், ப்ரதாபசிங்கு சற்றேனும் தன் தைரியத்தை விடவில்லை; ஊக்கமும் குன்றவில்லை. ரஜபுத்ர செளர்ய குணுதிசயங்களெல்லாம் இவரிடம் நன்குதோன்றின. ரஜபுத்ர அரசர்க்குளெல்லாம் இவர் ஒருவர் மாத்திரம் தனியே நின்று மொகலாய அரசர்களுடன் பெண்கொடுத்து பெண் வாங்கி சம்பந்தம் செய்யாமல், இவ்வாறு செய்வோர் யாவரையும் அவமதித்து வந்தார். மொகலாய அரசருடன் தன் சகோதரியைத் தந்து சம்பந்தம் கொண்ட மான்சிங்கு ராஜாவுடன் ஒருங்கே உண்பதற்குப் பிரதாபசிங் மறுத்துவிட்டார். அப்போதோ அவருக்கு வறுமையால் மிகத்துன்பம், எதிரிகளால் துரத்தப்படும் அவஸ்தை, பகல் தங்கின இடத்தில இரவு தங்காதநிலை. இவ்விதமிருந்தும் ஆண்மை குன்றவில்லை.

***

பிரதாபசிங்கு ஒரு பெரிய யுத்தத்தில் மொகலாயரிடமிருந்து தப்பி ஓடிய பாகம் மிகவும் ஆச்சரியகரம். அழகினுலும் தைரியத்தினுலும் மிக்கச் சிறப்பைப் பெற்ற தனது நீலவேணிக்குதிரை மீதேறி சமீபத்தில் நின்ற யாவரையும் கொன்று சிங்கம்போல் ஆர்த்துநின்றார். எவ்வளவுதான் சுத்த

65. நம்பனிணை யடிபூசை பண்ணவேண் டும்பண்ணி னுலுமிகுபத்தி வேண்டும்.

வீரனானபோதிலும், தெய்வ பலத்தாலுண்டாகும் விபரீதத்திற்கு யார் தான் என்னசெய்யலாம் ? கடைசியாக பாதாதிகேச பரியந்தம் காயம்பட்டு ரணகளத்தை விட்டோட நேர்ந்தது. இவர் ஓடியதை இருவர் பார்த்துத் துரத்திச் சென்றனர். அக்கணமே மொகலாய சேனையிலிருந்து அநாமதேயனான ஒருவனும் அவர்களுடன் பின்சென்றான். ப்ரதாபசிங்கு ஏறிப்போன குதிரைக்கும் அவரைப் பின்தொடர்ந்து சென்ற குதிரைகளுக்கும் கொஞ்சதூரம் தானிருந்தது. இதன் முடிவு எவ்வாறாகுமோ வென்று மொகலாயரைச் சேர்ந்தோரெல்லோரும் மிக்க ஆவலுடன் பார்த்து நின்றார்கள். ப்ரதாபசிங்கு தங்கள் கைவசப் படுவான், இல்லாவிடில் சாவானென்றது அவர்களுக்கு நிச்சயமாகத் தோன்றிற்று. ப்ரதாபசிங்கினுடைய குதிரையும் நடக்கமுடியாமல் தத்தளித்தது. அவரை பின்தொடர்ந்துபோன குதிரைகள் வெகு துரிதமாக ஓடின. ஆகவே அவர் மலையில் தப்பியோட முடியாதென்றது நிச்சயம். இவ்வாறாகப் பார்த்துக்கொண்டிருக்கையில் குறுக்கேயுள்ள ஒரு ஆற்றின் கரை ஓடினவர்களை மறைத்தது. ஒருநொடி நேரத்திற்கெல்லாம் ப்ரதாப சிங்குமாத்திரம் மெல்ல மெல்ல மேட்டின்மேல் குதிரை சவாரி செய்வதையும், அநாம தேயனானவன் மாத்திரம் தன்னந்தனியாகத் தங்களை நோக்கிவந்ததையும் பார்த்து மொகலாய சேனையாருக்குச் சொல்லவொண்ணா ஆச்சரியமும் கலவரமும் உண்டாயின. ப்ரதாபசிங் தப்பியோடிவிட்டார்.

* * *

இந்த அநாமதேயன் வேறு எவருமில்லை. சக்தா என்பது அவனது உண்மைப் பெயர். ப்ரதாபசிங்கினுடைய சகோதரனே அவன். பால்யத்தில் இவ்விருசகோதரர்க்கும் சண்டைநேர, அதன்மேல் சக்தா தன் சகோதரனுக்கு எதிரியான ஆக்பரின் ராணுவத்தில்சேர்ந்துகொண்டான். கடைசியாக, தனது சகோதரன் அபஜெயப்பட்டு நீலவேணிக் குதிரையில் ஏறி ஒன்றியாகப் போனதையும், அவனைக்கொல்ல எண்ணி அவனுக்குப் பின்சென்றவர்களையும் பார்க்கவே மனம் தாளக்கூடவில்லை. உடனே சகோதரபாசத்தால் தூண்டப்பட்டு ப்ரதாப சிங்குக்கு உதவிசெய்யப் பின்தொடர்ந்து ஓடி அவனைக்கொல்லச் சென்ற இருவரையும் தன் கையால் மாளும்படிசெய்து தன் சகோதரனைத் தப்பிப்போகும்படிசெய்துவிட்டுத் திரும்பினான். ஆயினும் தான் செய்தவற்றை உள்ளபடியே கூறி—“ என்ன ஐயா ! ராஜ்யபார சங்கடமும் அவன் தலையில் ஏறியிருக்க, அவன் உயிருக்கும் தீங்கு உண்டாவதைத் தடுக்க என்னால் ஆகும் போதும் அவ்வாறு செய்யாமலிருப்பேனோ ” என்றும் தெரிவித்தான். சக்தாவினுடைய சத்தியத்துக்கும் உத்தம நெறிக்கும் வியந்து அவனது அண்ணனான ப்ரதாப சிங்குடன் சேர்ந்து கொள்ள அநுமதியும் கொடுக்கப்பட்டது.

* * *

கடைசியில் ஆக்பர் சக்ரவர்த்தி ப்ரதாபசிங்கினுடைய உத்தம குணங்களுக்காக அவருடைய தேசத்தில் சிலபாகங்களைக்கொடுத்து உதயபுரி என்ற பட்டணத்தையும் கட்டச் செலவும் கொடுத்தார். அந்திய காலத்தில் சில வருஷம் ப்ரதாபசிங்குக்கு சௌக்கியம் கிடைத்தது. இது கிடைத்திருந்தும்

66. மாறாத கலைகற்று நிலைபெற்ற சபையிலே வாயிலா தவனொரு பதர்.



அரண்மனைக்குள் படுத்து சுகவாசியா யிருந்தால் ஒருக்கால் தனது தேசத்தவருக்கும் குடிகளுக்கும் ஆற்றும் கடனிற் குறை ஏது முறுமோ வென்று பயந்து இவர் இதையொன்றையும் அநுபவிக்கவில்லை.

* * *

ப்ரதாபசிங்கு சாகும்போதுகூட சண்டை செய்யச்சொல்லித் தன் குமாரனுக்கு உத்திரவு கொடுத்துவிட்டே இறந்தார். அது எப்படியெனின் அடியில்வருமாறு :—ஏழைகள்கூடத் தங்குவதற்கு முடியாத ஒரு சிறு குடிசையில் அற்பமான ஒரு ரஜாயை விரித்துப் படுத்துச் சாகுமுன்னம் ப்ரதாபசிங்கு பெரு மூச்செறிந்தார். இதை அவருடைய மாமன்பார்த்து, “மரண காலத்தில் இப்படிப் பெருமூச்சுவிட உமக்கென்ன மனக்குறை ?” என்றான். “ என்னுடையதேசத்தை ‘அன்னியர்’பால் முழுமையும் விடுவதில்லை என்ற உறுதியைக் கேட்டாலொழிய என் ப்ராணன் போகாது” என்றார். உடனே அவருடைய மந்திரிகள் சர்தார்கள், ஜனங்கள் முதலியோர் உம்முடைய மகன் பக்கம் நின்று நாங்கள் சாகுமளவும் சண்டைபோடச் சித்தமா யிருக்கிறோம் என்றும், சுயாதீனம் பெறாமல் நாங்கள் அரண்மனைகளைக் கட்டிக்கொள்வதில்லையென்றும் அரசனாகிய ப்ரதாப சிங்கினுடைய பாதத்தைத் தொட்டு திடமாகச்சொல்லி வணங்கவும், ப்ரதாபசிங்குக்குத் திருப்தியுண்டாகிப் பிராணனும் பிரிந்தது. இகழ்ச்சியும் புகழ்ச்சியும் தத்தம் முயற்சியால் உண்டாவதாகும். ப்ரதாப சிங்கின் வீரம்தான் என்னே !

* * *

ஐரோப்பாவில் முதல் முதல் புகையிலையின் உபயோகம் ஆரம்பித்த காலத்தில் அது மிகவும் கெட்டதென்று ராஜாங்கத்தார் அதிகார முறையால் தடுத்துப் போடவேண்டுமென்று பிரயத்தனப்பட்டார்கள். அந்தப் பிரயத்தனங்களெல்லாம் ஜனங்களுக்கு அதனிடத்தில் பேரபிமானம் இருக்கிறதென்பதையும், ஒவ்வொரு மனிதனும் சுயேச்சையாய்ச் செய்யும் காரியத்தில் துரைத்தனத்தார் பிரவேசிப்பது வீண் என்பதையும் நன்றாய்க்காட்ட உபயோகப்பட்டனவே யல்லாமல் காரியசித்தியைப் பெறவில்லை. அவைகளெல்லாம் ஜனங்களுக்கு ஹிம்ஸையாகத் தோன்றிற்றேயன்றி தங்களுக்கு நன்மையான காரியமென்று அவர்கள் நினைக்கவேயில்லை. புகையிலை விற்பனையின் பேரிலும் இறக்குமதியின்பேரிலும் கடூரமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டுமிருந்தன. எவ்வகை ஏற்பாடுகளும் கைகூடிவரவில்லை. புகையிலையின் உபயோகம் வரவரப் பெருகிப்போயிற்று. இப்போதோ அதிகாரிகளிற் பெரும்பான்மையோருக்குப் புகையிலை சம்பந்தமான சுருள்களடங்கிய பல பெட்டிகள் தேவையா யிருக்கின்றன.

* * *

காலஞ்சென்ற விக்டோரியா சக்ரவர்த்தினியார் இங்கிலாந்தின் மகாராணியாராகத்தெரிந்தெடுக்கப்பட்ட ஸந்தர்ப்பத்தைப்பற்றிய குறிப்பொன்றை இங்கு தருகிறோம் :—பின்னுக்கு ராணியாகப்போகிற செய்தியை அவருக்கு எவ்வகையிலும் தெரியாதிருக்கும் விதமாய் அத்தனை உத்தம ரீதியில் பாதுகாப்போடும் அவர் வளர்க்கப்பட்டார். அவருடைய 18-வது வயதான

67. வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதுங்கிடு மனக்கோழை தானொரு பதர்.

1837-ம் வருஷம் ஜூன்மீ 20-ம் தேதி இராத்திரி அக்காலத்து அரசரும் விக்டோரியா மகாராணியின் பெரிய தகப்பனுருமாகிய 4-ம் வில்லியம் பிரபு காலமாயினர். அந்த செய்தியைத் தெரிவிக்க ராஜ வைத்தியரும் பிரதான குருவும் விக்டோரியா இளவரசியின் மாளிகைக்கு வந்தனர். அப்பொழுது காலை 5-மணி; யாவரும் நல்ல நித்திரையாயிருந்தனர். ஆயினும் அவர்கள் மணியடித்து வேலைக்காரியை எழுப்பி, தாம் மிகவும் முக்கியமான காரியமாய் வந்திருப்பதாகச் சொல்ல, அவள் இளவரசி தூங்குகையில் எழுப்புவது உசிதமல்ல என்றாள். அதுகேட்டு அவர்கள், நாங்கள் ஒரு அவசியமான ராஜகாரியமாக வந்திருக்கிறோம்; எப்படிப்பட்ட நித்திரையாயினும் அதுவும் இப்பொழுது கொஞ்சம் இதற்கு இடங்கொடுக்க வேண்டியது தானென்றனர். இதற்குள் இந்த சந்தடி கேட்டு ராணியார் விழித்துக்கொண்டு அந்த இராவுடுப்புடனே, தலைமயிர் அவிழ்ந்து தோள்களில் அலையக் கண்களில் நீர்ததும்ப அவர்களெதிரே வந்து நின்றார். உடனே அவர்கள் தாம் வந்தசெய்தியைத் தெரிவிக்க ராணியார் பிரதான குருவை நோக்கி, என்னைக் கருணையுடன் கடாக்ஷித்தருளும்படி கடவுளைப் பிரார்த்திப்பீர்களாகவென்று வேண்டினார். அவ்வண்ணமே அவர்கள் முழங்காலிட்டு, இனி எதிர்பார்த்திருக்கிற ராஜகாரியங்களை நன்கு நடத்துவதற்கு வேண்டிய விவேக விருத்தியையும், வல்லமையையும் ராணியாருக்குத் தந்தருளும்படிக் கடவுளைப் பிரார்த்தித்தனர். மறுநாள் வழக்கப்படி, ராஜ வாத்தியங்கள் முழங்க, பீரங்கிகள் வெடிதீர, விக்டோரியா மகாராணியார் சிங்காதன மேறினார் என்றசெய்தி எங்கும் விளம்பரப் படுத்தப்பட்டது. 1838-ம் வருஷம் ஜூன்மீ 28-ம் தேதி ராணியார்க்கு முடிசூட்டினார்கள். இது பழய சரித்திரமாயினும் துக்கமும் சுகமும் ஒருங்கே பின்னிக்கொண்டிருக்கிற தத்துவத்தைமட்டும் இதினின்றும் கிரகித்துக் கொள்ளக்கடவோம்.

---

வியஸனப்படுகிறவனைத் தவிர, மற்ற எல்லோரும் வியஸனத்தை ஜயிக்கக்கூடும் என்று ஷேக்ஸ்பியர் கூறியிருக்கிறார். இதன் தாத்பரியம் யாது? வியஸனப்படுகிற ஒரு மனிதனுக்கு தைரியம் சொல்லத்தேற்ற அநேக மனிதர்கள் தோன்றுவர். ஆயினும அவரவர்க்கு வியஸனமுண்டானால் அடக்கிக் கொள்வது அரிது. இதை அனுஸரித்தே சொல்வுமெளிது, செய்வதரிது என்னும் பழமொழியும வழங்குகிறது.

## கலக புருஷர்கள்—குண்டுணிகள்.

தம்பிக்கும் தமையனுக்கும் சண்டை மூட்டுகிறார்கள். புருஷனுக்கும் மனைவிக்கும் வாக்குவாதம் விளைவிக்கிறார்கள். கொண்டவன் கொடுத்தானுகிய பந்துக்களை இரகஸ்யமாய் வரவழைத்து அவர்களுடைய காதில் இல்லாத அபவாதங்களை இனத்தான் மீது ஆரோபித்து வீண்சண்டையை மூட்டுகிறார்கள். அப்பப்பா! இந்தத் துஷ்டர்கள் இருக்கு மிடத்தைச் சொப்பனத்திலும் நினைக்கலாகாது. இவர்களால் குடும்பம் பாழ்! சமாதானம் பாழ்! யாவும் பாழே !!

---

68. வேறொருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி வீண்பேசவானொரு பதர்.

# நட்பு

(முதல் கமலம் 599-ம் பக்கத் தொடர்ச்சி.)

**நட்பின் இலக்கணம்**

இனி, ஒருவரை யொருவர் காணும் பொழுது 'நெஞ்சிலொன்று - நாவிலொன்று' என்றவாறு ஆஷாடபூதிபோல் முகமலர்ச்சி காட்டி வெளிச்சிநேகம் பாராட்டுவது - உதட்டுறவு கொண்டாடுவது - நட்பின் உண்மையானதன்மையாகாது; மனப்பூர்வமாகக் களங்கமொன்றுமின்றி உள்ளம் ஒன்றுபடத்தக்க அன்போடு சிநேகிப்பதே நட்பாகும். இதையே,

> "முகநக நட்பது நட்பன்றுநெஞ்சத்
> தக நக நட்பதே நட்பு"

என்றனர் பொய்யா மொழியார். "கேட்டை விளைவிக்கும் வழியிற் போகுங்கால் தடுத்தும், சன்மார்க்கத்தில் செலுத்தியும், ஊழ்வினையால் தீங்கு நேரில் அதை உடன் இருந்து அனுபவித்தும், உடலிரண்டேயன்றி உயிரு முணர்ச்சியும் ஒன்றே யென்னுமாறு பிரிவின்றிப் பிணைக்கப்பட்டும், பழகப்பழகப் புது மகிழ்வும் இன்பமும் எய்துமாறு இருவர் கலத்தலே நட்பாம்" என்பது அச்செய்யுளின் தாத்பரியம். அன்றியும்,

> "நட்டா ரெனப்படுவார் நாடுங்கால் வையத்துப்
> பட்டாம் பலபிறப்புத் துன்பமென்—றெட்டி
> யறநெறி கைவிடா தாசாரங் காட்டிப்
> பிறநெறி போக்கிற் பவர்"

என்பது அறநெறிச்சாரம்.

நண்பர்களுக்குள் ஒருவர் கேடுதரத்தக்க தீயவழிகளிற்செல்வாராயின், அவரை யவற்றிற் செல்லவொட்டாது விலக்கி, நன்மை விளைக்கத்தக்க சன்மார்க்கங்களிற் செலுத்தியும், அவர்க்கு ஏதேனுந் தீங்கு நேர்ந்த விடத்து அதனைத் தமக்கு நேர்ந்ததாகப் பாவித்து விட்டு நீங்காமற் கூடவேயிருந்தனுபவித்து அதன் பாரத்தைக் குறைத்தும், இங்ஙனம் பரஸ்பரம் வேண்டிய உதவிகளைச்செய்து கொண்டு ஒற்றுமையுட னிருத்தலே சிநேக தருமமாம். 'உறவெனப்படுவது உற்றுழி நிற்றல்'. அன்றியும்,

> "அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
> அல்ல லுழப்பதா நட்பு"

என்பது நந்தமிழ் மறையின் முறையீடு.

மேலும், "கேண்மை யென்பது கேட்டிடத்துதவல்" ஆம். எனவே,

> "உடையுழி காலை யுதவிய கைபோ
> லடலை தீர்த்தலன்பன தியல்பு"

என்றபடி, நட்பினருக்குத் தீங்கு நேருமாயின், தகுந்த தருணத்தில் அத்தீங்கை யொழிப்பதும் நண்பர் கடனும்.

---

69. பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே பொருளை யருளிச்செய்தனை.

"ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது பழமொழி. இதன்பொருள் ஒருத்தருடைய பிழையைப் பொறுத்தலே இரண்டுபேரது சிநேகத்துக்குக் காரணமாகும் என்பதாம். பல சிறந்த குணங்களையுடைய உயர்ந்த பொருள்களிலுஞ் சில குற்றங்களிருக்கை உலகவியல்பே யாதலாலும் "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்பது நீதிமுறைமையாதலாலும், தம்மால் சிநேகிக்கப்பட்டாரிடத்துப் பின்பு காணப்படுங் குற்றங்களை யெல்லாம் பாராட்டாமல் அவரிடத்துள்ள குணங்களையே முக்கியமாகக் கொள்ளவேண்டும். 'தவறியற்றல் மனிதரியற்கை' என்பதை யுன்னி நண்பரது பிழையைப் பொறுக்கின், அதுவே நட்பைப் பலப்படுத்தி நிலை நிறுத்தக் காரணமாகும். இங்கு,

நட்பிற் பிழை பொறுத்தல்

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு"

என்ற திருக்குறளை ஒப்பிடுக.

"வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு"

என்ற நாலடியும் கவனிக்கத் தக்கது. (தொடரும்.)

லக்ஷ்மீவேங்கடரமணன்.

---

"உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்பதுபோல, ஸகோதரர்களாலேயே பெருந்துக்கம் விளைவதுண்டு. இராமனும் லக்ஷ்மணனும்போல் ஒற்றுமையோடு வாழவேண்டுமென்பது விதியானாலும் அதை யனுஸரிப்பதில்லை. ஒவ்வொருவனும் ஸ்வய நன்மையைக்கருதி கள்ள யோசனை செய்து ஸகோதரனுக்குப் பற்பல விபத்துக்களை விளைத்து அவன் தொலைந்து போவதிலேயே திருஷ்டி கொள்ளுகிறான். இத்தகைய துற்குணமும் கபடாசாரமும் நாளுக்கு நாள் முற்றிவருவதற்குக் கலியுகந்தான் காரணமோ? அல்லது கசடர்களின் ஸகவாஸம் காரணமோ? இரண்டும் காரணங்களாகும்.

## இதற்குமட்டும் காது கேட்கவில்லையோ?

நீடித்த ஸம்பாஷணையின் இடையிலே ஒருவர் ஒரு விஷயத்தைச் சொல்ல, அந்தசமயம் அதைக்கேட்கவேண்டியவர் வேறொருவரிடம் பேச்சுகொடுத்துக் கொண்டிருந்ததால் அதைக் கவனிக்காமற்போக, உடனே முதலிற் பேசியவர்—"இதற்குமட்டும் காது கேட்கவில்லையோ" என்று சிடுசிடுக்கிறார். அதைவிட வேறு நல்லவார்த்தையாகச் சொல்லக்கூடாதோ? இச்சிடுசிடுப்பு ஏனோ?

---

70. புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே பொல்லாத மிடி வைத்தனை.

## பனிக்கட்டியின் விசித்திரங்கள்

தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டியாகின்றது. நமது தேசம் அதிக உஷ்ணமானபடியால் இங்கு பனிக்கட்டி அதிகமாய் உண்டாகிறதில்லை. மிகுந்த குளிர்ச்சியுள்ள சில தேசங்களில் மாத்திரம் பனி அநேக அடி ஆழம் ஊறித் தோய்ந்துபோயிருக்கும். அதிசீதமான தேசங்களில் சமுத்திரத்தினடுவே பனிக்கட்டித் தீவுகள் அநேகம் காணப்படுகின்றன. அவை ஒவ்வொரு காலங்களில் உடைந்து மிதக்கத் தலைப்படும். இந்தப் பனிக்கட்டித் தீவுகள் பனி மலை என்றும் சொல்லப்படும்.

இவ்விதம் தண்ணீர் கட்டியாய்க் கட்டிக் கடல்களின் நடுவில் திட்டுத் திட்டாய் இருப்பது நம்மவரில் அநேகர் காணாத காட்சிதான். பனிக்கட்டித் தீவுகள் பத்துப் பதின்மூன்று மைல் வரையில் சில பரவி யிருக்கின்றன. ஜலத்தைவிடப் பனிக்கட்டி லேசானது. அதனாலே அது ஜலத்தில் மிதக்கின்றது. பனிக்கட்டியின் நிறை தண்ணீரின் நிறையில் ஏழில் ஒரு பங்கு குறைந்தது. பனி மலைகள் வெகுபாகம் தண்ணீருக்குள் அமிழ்ந்திருக்கும். மேலே எவ்வளவு புலப்படுகிறதோ அதைப்போல ஆறுபங்கு உள்ளே அமிழ்ந்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தப் பனிமலைகள் கப்பல்களுக்குப் பெரும் பகையாளிகள். இராக்காலங்களில் அதிவேகமாய்ப் போகையில் பனிமலையில் அடிபட்டு உடைந்து மூழ்கிப்போன மரக்கலங்கள் எண்ணிறந்தவை. அதனால் கப்பலோட்டிகள் அதன்மேலேயே கவனமாய்ப் போவார்கள். மேலும் அவர்கள் பனிமலைகள் சமீபத்திலிருக்கின்றனவோ என்னவோ வென்று அடிக்கடி ஜலம் அதிகுளிர்ச்சியாயிருப்பதும் வெப்பமாயிருப்பதும் ஒருவகைக் கருவியால் ஆராய்ந்துகொண்டே போவார்கள். அந்தப் பனிமலைகள் கடலில் மிதந்துபோகும் விதத்தைப் பக்கத்துப் படத்தில் காணலாம். இந்தப் படத்திலிருக்கும் பனிமலைச் சிகரத்துக்குமேல் சூரியப் பிரபைபோன்ற வில்வடிவான ஒளிவட்டம் வடகடலையடுத்த உத்தர துருவத்திற்குச் சமீபத்திலுள்ள சீத தேசங்களில் தோன்றும் ஒரு சிறந்த கண்காட்சியாம். இதற்கு அரோரா பொரியாலிஸ் என்று இங்கிலீஷ் பாஷையில் பெயர் கூறுகின்றனர்.

தண்ணீர் சாதாரணமாய் இருப்பதற்கு எவ்வளவு இடம் வேண்டுமோ அதைவிடப் பனிக்கட்டியாகும்போது அதிக இடம் பிடிக்கும். ஆதலால் பூமியிலாவது கற்பிளவுகளிலாவது வீழ்ந்த நன்னீர் தோயும்போது பரவ இடமில்லாமையால் தானிருக்கும் கல் முதலியவைகளைப் பிளந்து அவ்விடத்தில் உறைகின்றது. இப்படி ஜலம் உறையும்போது வெகு பலமாய் உறைகிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு இரும்புப் பாத்திரத்தில் தண்ணீரைவிட்டு நன்றாய் மூடி அந்நீரைத் தோயச்செய்தால், அப்போது அந்தப்பாத்திரம் வெடித்து வெகு தூரத்திற்கு அப்புறம் போய்விழும்.

---

71. நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத் தக்க நெறி மாதரைத் தந்தனை.



பனி மலைகளுக்கு இடையில் கப்பல்கள் வெகு ஜாக்கிரதையாகச் செல்லும் காட்சி.

72. நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு நீலியைச் சேர்வித்ததென



தாபச்சுரம் முதலிய சில நோய்களுக்குப் பனிக்கட்டி மிக்க உபயோகமான ஔஷதம். சீத தேசங்களில், வெகு தூரமான இடங்களுக்கு யாத்திரை செய்ய இந்தப் பனிமலைகள் பெரிய வாராவதியாய் இருக்கின்றன. பனிக்கட்டியைக் கம்பளங்களில் கட்டிச்சென்றால், அது உருகாமல் அப்படியே இருக்கிறது. அதன் காரணம் மிகச் சுலபமே. நமது தேகத்தில் சூடு உண்டாவதற்கன்றோ நாம் கம்பளத்தைப் போர்த்துக்கொள்ளுகிறோம். கம்பளம் சூட்டை உண்டாக்குகிறதென்பதில்லை. நமது தேகத்திலுள்ள உஷ்ணமும் சீதமும் வெளியே போகவொட்டாமலும், வெளியேயிருப்பது உள்ளே வரவொட்டாமலும் காப்பதே அதன் குணம். ஆதலால் பனிக்கட்டியின் மேலும் வெளியில் இருக்கின்ற சூடு உறைக்க வொட்டாமல் காக்கின்றது. ஆதலின் அது உருகுவதில்லை. இத்தன்மையான பனிக்கட்டி நமது தேசத்தில் ஒவ்வொரு காலங்களில் மழை பெய்யும்போது வானத்திலிருந்து விழுவதை நாம் காணலாம்.

பனிக்கட்டி குளிர்ந்திருக்கும் தன்மைபோல, உனது மனதும் குளிர்ந்த மனதாய் இருக்கட்டும். உனது சொல்லும் குளிர்ந்த சொல்லாக இருக்கப் பயிற்சி செய்துகொள். உனது குணமும் குளிர்ந்த தன்மையதாய் விளங்கட்டும். எவரையும் குளிர்ந்த பார்வையுடன் பார். குளிர்ந்த மனம் எவரையும் சேர்த்து வைக்கும். குளிர்ந்த குணம் அனைவரையும் விசுவாசித்து அன்பாய் நடந்துகொள்ளச்செய்யும். குளிர்ந்தசொல் எத்தகைய கோப வார்த்தைகளையும் ஆற்றிவிடும். குளிர்ந்த பார்வை தீய சிந்தனைகளை விலக்கி உனக்கும் பிறருக்கும் நன்மையைச் செய்யும். குளிர்ந்த சுபாவமுடைய குடும்பத் தலைவன் யாவராலும் கொண்டாடப்படுவான். பனிக்கட்டியின் குளிர்மையினின்றும் இந்தப் படிப்பினையை உணர்ந்துகொள்க.

---

காலத்திலும் ஒருவித லக்நத்தில் புறப்பட்டால் காரியநாசம் உண்டாவதை யாரே யறியார்? சிலர் எதிர்ப்பட்டால் ஸௌக்கியமும், சிலர் எதிர்ப்பட்டால் அஸௌக்கியமும் உண்டாகின்றன. கண்கள் ஒன்றாயினும், ஒரு ஸமயம் குளிர்ந்த பார்வையும், மற்றொரு ஸமயம் கடூரப் பார்வையுமுள்ளன. சிலருக்கு அருள் நோக்கும், சிலருக்கு மருள் நோக்கும், சிலருக்குக் கொள்ளிக் கண்களும் இருப்பதால் ஸாதுக்களின் ஸங்கத்தைத்தேடி துஷ்டர்களின் ஸாமீப்யத்தினின்று விலகுவ தவசியம்.

### மத்தியஸ்தம்.

உன் வீட்டுச்சண்டையில் மற்றொரு மனுஷன் மத்தியஸ்தத் திற்கு வந்தால் உன் நியாயத் தீர்ப்பு தேவையில்லையென்றும், எங்கள் சச்சரவை நாங்கள் எப்படிபே[illegible]ம் தீர்த்துக்கொள்வோம்; நீ நடுவில் வந்து நுழையாதே யென்றும் சொல்லி அவனை உடனே எழுந்து போகச் செய்துவிடு. உன வீட்டைப்பற்றிய சங்கதியில் இன்னொரு நாய் தலைக்கவேண்டிய அவசியமில்லை.

---

73. உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந்தாலென்ன? வோங்கு மிடிவரிலென்னகாண்?

# தேகதத்துவ சூக்ஷ்மங்கள்

(154-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 4. ஆகாரம் ஜீர்ணமாதல்

ஜீர்ணமாவ தென்னவென்ருல், நாம் உண்ணும் உணவு வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்தபிறகு, போஷிக்கத் தக்க ஸாரமான பாகத்தைத் திப்பியினின்றும் பிரித்து ஓர்வித நீர் போலாக்கி இரத்தமாக மாற்றுகிறதுதான். நாம் உட்கொள்ளுகிற ஆகாரமே நீர்த்தன்மையைப் பெருமல் சரீரத்தைப் போஷிக்காதோவெனில், போஷிக்க மாட்டாது. ஏனெனில் அந்த ஆகாரம் முழுவதும் ஸாரமல்ல; அதிக பாகம் திப்பியும், மற்றபாகம் ஸாரமுமாயிருக்கிறது. வயிற்றுக்குள் போகும் சாதமும், கறிகாய் முதலிய பதார்த்தங்களும் மற்றப் பலகாரம் முதலான பண்டங்களும் இரத்த நரம்புகளின் வழியாய்ச் சென்று சரீரத்தைப் போஷிக்க மாட்டா. எவ்வளவு நன்ருய் மென்று மாபோலாக்கி விழுங்கினுலும், சரீரத்தில் ஓடும் இரத்த நாடிகளின் வழிகளை அடைத்துத் தீங்கு உண்டாக்குமே யொழிய சரீரத்துக்குப் போஷணையாகமாட்டா. ஆகையால் ஆகாரத்திலிருக்கும் உபயோகமில்லாத பாகம் குடல் வழியாய்ச் சரீரத்தினின்று வெளியே தள்ளப்பட வேண்டியது; உபயோகமான பாகமோ அநேக மாறுபாடுகள் அடைந்து இன்னும் சில வஸ்துக்களோடு சேர்ந்து கடைசியில் இரத்தமாக மாறி உயிருக்கு ஆதாரமாகிறது. அந்த இரத்தம் எலும்புக்கு உறுதியும், தோலுக்குப் பலமும், புத்திக்கு ஸ்திரமும் கொடுக்கின்றது.

நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை இரைப்பையானது மஞ்சள் நிறமுள்ள ஓர்வித மிருதுவான பாகுபோலாக்கி, அதன்பிறகு அதை ஜீரணமாக்க ஆரம்பிக்கிறது. அந்தப் பாகை அன்னப்பாகு என்னலாம். இரைப்பை இரண்டு வழிகளுள்ளதாய், ஒரு பெரிய தோல் பையைப் போல் இருக்கிறது.



ஆகாரம் பூர்ணமாய்க் கொண்ட இரைப்பை.

ஒருவழியாய் ஆகாரம் அன்னக் குழலாகிய (1) கண்ட நாளத்தால் சென்று உள்ளே இறங்குகிறது; மற்ருருவழியால் (2) அன்னப்பாகு குடலில் போய் விழுகிறது. ஒரு மனிதனுடைய இரைப்பை ஏறக்குறைய ஒன்றரைச் சேர் பிடிக்கும்.

உணவு இரைப்பையிலே போய் விழுந்தவுடனே, நாவில் உமிழ்நீர் சுரக்கிறதுபோல, தோலின் கீழ் இருக்கும் ஒருவகைக் கிராந்திகளினின்றும் ஓர்வித திரவ வஸ்து உண்டாகிறது. அது ஜீர்ணநீர் என்னப்படும். ஆகிலும் இந்த ஜீரண நீரின்தன்மை உமிழ் நீரினுடையதுபோலல்ல. உட்செல்லும் உணவை அன்னப்பாகு ஆக மாற்றுவது இந்தநீரின் காரியந்தான். எவ்விதமான ஆகாரமானுலுஞ்சரி, எந்த

74. தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ் சார்மணம் பழுதாகுமோ?



நிறமான ஆகாரமானுலும்சரி—எல்லாவற்றையும் அந்த ஜீர்ணநீர் சாம்பல்
நிறமான ஒரேவர்ணமுள்ள அன்னப்பாகாக ஆக்கிவிடுகிறது. எந்தப் பதார்த்
தத்தைப் பாகாக மாற்ற ஜீர்ணநீரால் ஆகாமற் போகிறதோ அது இரத்தபுஷ்
டிக்கு அடுத்ததல்ல ; ஆகையால் அது ஏற்ற உணவன்று, நமது இரப்பையைக்
கல்லையும் மண்ணையும் போட்டு நிறைத்தால் அதுபாகாக மாறமாட்டதாகையால்
அது போஷணை கொடுக்கமாட்டாது. அப்படியே புல் பூண்டுகள் நமக்கு
ஒத்துக்கொள்ளாத உணவுகள். ஆடு மாடுகள் சோறுமுதலிய மனிதனுக்குரிய
ஆகாரங்களைப் புசிக்குமாயின் அவைகளுடைய இரைப்பைகளுக்கு அப்படிப்
பட்ட ஆகாரங்களை ஜீர்ணமாக்கும் தன்மை யில்லாமையால் போஷணையை
அடையமாட்டா.

இதனால் என்ன ஏற்படுகிறதென்ருல், நாம் எவ்வளவு சாப்பிடு
கிருேமோ அவ்வளவும் நம்மைப் போஷிக்கிறதில்லை. எவ்வளவு ஜீர்ண
மாகிறதோ அவ்வளவுக்குமாத்திரம்தான் போஷணைகொடுக்கும்சக்தியுண்டு.
இரத்தபுஷ்டிக்கு ஏற்றதாயும் எளிதாயும் (உபத்திரவமில்லாமலும்) சீக்கிரமாய்
ஜீர்ணமாகத் தக்கினதாயும் இருக்கிற ஆகாரமே உடம்புக்கு ஏற்றது. இரைப்
பையில் சேர்ந்து சுலபமாய் அன்னப்பாகாகக் கரையாமல் உபத்திரவம் பண்
ணும் ஆகாரமும், போஷண சக்தி குறைவாயிருக்கும் ஆகாரமும் தேகத்துக்கு
ஆகவே ஆகாது.

நாம் உண்ணுகிற உணவுக்குத் தக்கபடி ஜீர்ணநீரையுண்டாக்கி அதை
ஜரிப்பிப்பதே இரைப்பையின் காரியம். அளவுக்குமிஞ்சி அதிக ஆகாரம் உட்
கொண்டால், அளவுக்கு மேற்பட்டசாதம் ஜீர்ணமாகாமல், அது புளியேப்பம்
போன்ற ஒருவித வெடிப்புக் காற்ருகமாறி அஜீர்ணம் என்கிற வியாதியை
யுண்டாக்குகின்றது. புசித்த பின்பு இனி ஆகாரம் வேண்டியதில்லை யென்
பதற்கு ஒரு அடையாளமான ஏப்பம் உண்டாகின்றதே, அது மிக்க
கலமானது.

நாம் பட்டினியா யிருக்கும்பொழுது இரைப்பையின் பக்கங்கள்வெறும்
பையைப்போலத் தளர்த்தியா யிருக்கின்றன. சாப்பிட ஆரம்பித்தவுடன் அந்த
இரைப்பையின் பக்கங்கள் விலகி, ஆகாரம் வந்துவிழ இடங்கொடுக்கின்றன.
அப்போது இரைப்பையில் ஓர்வித அசைவு உண்டாகி தயிர் கடையும் வண்ண
மாய் ஆகாரம் முன்னும் பின்னும் சுழல்கின்றது. இந்த அசைவு ஆரம்பத்தில்
மெதுவாயிருந்து ஜீர்ணம் ஆக ஆக வேகமாகின்றது. இரண்டு வஸ்துக்களை
ஓர் பாத்திரத்தில் போட்டுக்குலுக்கிக் கலக்குவதுபோல், அந்த அசைவினுல்
ஆகாரம் ஜீர்ண நீரோடு நாலண்டையும் கலந்து ஒத்துக்கொள்ளுகிறது.

75. தக்கயால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு சாரமதாங்குறையுமோ?

நாம் புசிக்கும் ஆகாரம் அன்னப்பாகாக மாறின பிறகு இரைப்பையினின்றும் குடலில் பேர்ய்விழுந்து இன்னும் சில வேறுபாடுகளை அடைகின்றது. மேலேசொன்ன அசைவு போஜனத்தை ஜீர்ண நீரோடு கலப்பதுமன்றி, அது பாகான பிறகு இரைப்பையின் எந்தப் பக்கத்தில் குடலுக்கு வழியிருக்கிறதோ அங்கே கொண்டுபோய்த் தள்ளுகிறது. குடலின் துவாரத்தண்டை (2) மூடி ஒன்றிருக்கிறது. அது ஜீர்ணமான பதார்த்தங்களைக் குடலுக்குப்போகவிட்டு, அப்படி ஆகாதவைகளை மறுபடி இரைப்பைக்கே திருப்பிவிடுகின்றது. இந்த விசித்திரமான சக்தியை சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுள் இந்த மூடிக்கு அமைத்திருக்கிறார். நமக்கு ஸாதாரணமாய்த்தோன்றும் விஷயங்களுக்குள் எவ்வளவு அற்புதமான ஞானங்கள் மறைந்திருக்கின்றனவென்பதைக் கண்டீர்களா ?

(தொடரும்.)

---

உலகத்துக்கு உபகாரம் செய்ய அநேக வழிகள் இருக்கின்றன. ஒருவன் அனுஸரிக்கும் வழி மற்றொருவனுக்கு நன்மையல்லவென்று தோன்றும். அதனால் அவன் முன்னவனைத் தூறுவதும் மூடத்தனம், கடைசிமட்டும் கவனித்துப் பயனுண்டாகாமற்போனால் மட்டும் அபிப்பிராயம் சொல்லக்கூடுமேயன்றி, அதற்கு முன் இது கெடுதல், அது நன்மையென்று உரைப்பது அவிவேகம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விஷயத்தில் ஸாமர்த்தியமிருக்கும். அதில் அவன் பரிசிரமப்பட்டால் தக்க பலனைப் பெறுவானென்பதிற் சந்தேகமில்லை. எல்லாவித வழிகளும் ஒரே நன்மையை நாடக்கூடும். எந்த வழியையேனும் அனுஸரித்துத் தனக்கும் உலகத்தாருக்கும் நன்மைசெய்து கொண்டால் அந்த வழியே சிறந்த வழி. உலகமென்பது அறிவாளிகளையே குறிக்கும்.

## துராத்மாக்களின் தீய ஸ்வபாவம்

சிலர் கலகம் விளைப்பதில் சதுரர்கள். சிலர் யோக்கியர்கள் போல் நடந்து அந்தரங்கத்தில் துஷ்கிருத்தியங்களைச் செய்வதில் ஸாமர்த்தியர்கள். மற்றுஞ் சிலர் தங்களை மேதாவிகளென்று மனஸ்கரித்து நியாயம் தீர்க்க முன்வருவார். தன்னுடைய ஆலோசனையைப் பிறன் கேட்கின்றானுவென்று முன்னுடி யறிந்துகொள்ளும் சக்தியில்லாத மனிதர்கள் எப்படி விவேகிகளாவர்? யாருக்கேனும் தீங்கிழைத்து அதனால் ஒருவித ஆநந்தத்தையடைய வேண்டுமென்று விரும்புவது சிலரது தன்மை. இதனால் இவர்கள் என்ன பயன் அடையப்போகிறார்களோ ?

---

76. நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி னீள்குண மழுங்கி விடுமோ ?

# பிரபஞ்ச விநோதம்

1. வியாபாரியின் மனம் :—தன் வாடிக்கைக்காரனுக்குக்கொடுக்க வேண்டுமென்று மனமிருந்தால் எவ்வளவு உயர்ந்த சரக்காயினும், தனக்கு அப்பொழுது பணத்திற்கு எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் சமாளித்துக் கொண்டு கடனுக்குத் தந்து விடுகிறான். தர மனமில்லாவிடிலோ எவ்வளவு அற்ப சாமானாக இருந்தபோதிலும் அதை உயர்த்திக் காண்பித்து இருப்பு கொஞ்சம், கடனுக்குத் தரமுடியாதென்று சொல்லி விடுகிறான். மனதின் தாராள சமயமறிந்து எதுவும் பெறவேண்டும் போலும் !

2. அறியாமை :—பிறரை அவமானம் செய்துவிட்டோமென்று அகமகிழ்வோர் தாமும் அதன் மூலம் ஒருவரது நட்பினை இழந்தோமென்பதைச் சற்றும் உணர்வதில்லை. தங்களின் வெற்றிமயக்கத்திலே— அடைந்த அந்த நஷ்டம் தோற்றுவதில்லைபோலும் !

3. பேதமை :—சிலர் தங்களைப் பிறர் பார்த்து கௌரதைகொண்டு மதிப்பார்களென்று செய்யப்புகும் காரியத்திலிருந்தே அதற்கு எதிரிடையாய் அவமானம் அடைகிறார்கள்.

4. உத்தியோக தடபுடல் :—புதிதாய் உத்தியோகத்தில் அமர்ந்தவன் வீட்டில் தடபுடல்கள் அதிகமாயிருக்கும். நடக்கிற நடையும் புதிது. பேச்சின் தொனியும் வேறுமாதிரி. எல்லாம் புது மோஸ்தரில் இருக்கும். பழய உத்தியோகஸ்தனோ தன் வேலையின் சுமையையும் உத்தியோகத்தின் நிலையாமையையும் தெரிந்துகொண்டு பரம சாதுவாக இருப்பான்.

5. சமையல் :—தன் மனைவி சமைக்கும்போது புருஷனின் அதிகாரம் அதிகமாயிருக்கும். ஆனால் அந்தப் புருஷனே சமைக்கவேண்டிய விதிவசம் ஆகும்போது ஒரு அதிகாரமும் தென்படாது.

6. கெட்டதிலும் நல்லதுண்டு :—நாம் விலக்கிய மனிதனே நமக்குப் பேருதவி செய்யக்கூடியவனாய் விடுவன். நாம் போக்கிரி என்று தூற்றிய மனிதனே ஒருவீடு தீப்பற்றி எரியும் பொழுது உயிருக்குத் துணிந்து உள்ளே தொட்டிலில் தூங்கும் குழந்தையை எடுத்துவந்து விடவும்

---

77. கற்றபெரி யோர்மகிமை யற்பாறி கிலரேனுங் காசினி தனிற் போகுமோ ?

கூடும். நாம் சாதுவென்று புகழ்ந்த மனுஷ்யன் அந்த சமயம் எந்த வேலைக்கும் உதவாமல் ஜாடையாய் வேடிக்கைப் பார்ப்போரில் ஒருவனாக மாறிவிடவும் கூடும்.

7. இரண்டு முண்டு :—நாம் பணிய வேண்டியவர்களு முண்டு. நமக்குப் பணிகிறவர்களுமுண்டு. ஒவ்வோர் வேளை நம்மைப் பணிந்தாரையே நாம் பணியவேண்டிய தருணமும் நேரும். எனவே, எல்லோரையும் அநுஸரித்துக்கொண்டு செல்வதே யுக்தம்.

8. எங்கு வந்தீர்கள் ?—ஒருவர் வீட்டிற்குச்சென்று விசாரிக்கையில் எங்கு வந்தீர்களென்று கேளாமலே வெளியில்காக்கவைத்துவிட்டுத் தங்கள் பாட்டில் இருந்துவிடுகிறார்கள். இவ்விதமே ஒருவரைத் தேடிவந்து கண்டு நிற்கும்பொழுது வந்தவர்களை எங்கு வந்தீர்களென்று கேளாமலே தாங்கள் ஏதோ மகா வேலையில் இருப்பதுபோல் பாவனை காட்டிக் கொள்கிறார்கள். இத்தகையோர் பிறகு ஒருகாலம் தாங்களே பிற ரொருவரைத் தேடிச்சென்று இவ்வாறு பதிலுக்குப் பதில் அலக்ஷியப்படுத்தப் படும்போது தான் அதன் வியாகூல கனம் இவ்வளவென்று தெரியவரும்.

T. S. குழந்தைவேல் முதலியார்.

---

ஒரு கிராமத்தில் ஒருவீட்டில் நடுநிசியில் ஏதோ ஸப்தம்உண்டாயிற்று. வீட்டுக்காரன் பல இடங்களில் பார்த்தான். ஒருவனுமில்லை. பின்னர் படுக்கையறைக்குப் போகும்போது வழியிலிருந்த ஒரு கூடையைத் திறந்தான். அதில் அழுக்குத் துணிகளைப் போட்டுவைப்பது வழக்கம். அகஸ்மாத்தாய்த் திறக்கவே திடீரென்று ஒரு ஆள் அதிலிருந்து வெளியே கிளம்பி கதவைத் திறந்துகொண்டு ஓடிப்போனான். ஆகவே, திருடர்கள் போக்குவரத்துள்ள கிராமங்களில் இராக்காலத்தில் ஒவ்வொன்றையும் செவ்வையாய்ப் பார்த்துப் பின்னர் படுக்கவேண்டும்.

### அது மரியாதையல்ல.

வீட்டில் எவருமின்றி ஸதிபதிகள் இருவரும் தனித்து உறங்குகையில் அங்கே மற்றொரு மூடம் பாயைப்போட்டுக் கொண்டு உறங்குவது ஒழுங்காகாது. மேலும் அந்த மூடம் இரவெல்லாம் கண் விழித்திருப்பதாயின் அவன்மீது நல்ல அபிப்பிராயம் உண்டாகமாட்டா. பலவித சந்தேகத்திற்கும் இடமாய்விடும்.

78. உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி யுறவாடு முறவு முறவோ ?

---

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | விகடப் பிரதாபன்<br>(Registered.) | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

## ஆயுள்விருத்தி ஆணுக்கா பெண்ணுக்கா ?



அதுதானப்பா பெரிய கேள்வி. இதற்கு விகடன் பதில் சொல்வியாக வேண்டியது அவனுடைய வேலை. ஆணுக்கே அதிக ஆயுள் பெருக்கமென்றால், மணாளனைப் பறிகொடுத்த மங்கையரெல்லாம் விகடன் முகத்தில் இடிக்கப் புறப்பட்டு விடுவார்கள். பெண்ணுக்கே ஆயுள்விருத்தி என்று ஒருவகையாய்த் துணியப்படுகிறது. இதைச் சொல்லப்போனாலோ இளம்பிராயத்திலேயே சண்மூடிய காரிகையர்களின் கணவன்மாரும், 2-ம், 3-ம், 4-ம் தாரக்காரர்களும் விகடனுடன் வாதுக்கு வந்துவிடுவார்கள். ஆதலின் விகடன் என்னுடைய ஓட்டைவாயை வேறொரு வழியாய்த் திருப்பி வியாக்கியானம் செய்தால்தான் இந்தக் கேள்விக்குத் தகுந்த அமைதியான பதிலாயும் சாந்தமானபேச்சுமாயிருக்கும். எவரும் விகடனை எதிர்க்கவராத வழியாகவும் அது போகும். ஆகவே, அந்தப்பாதையில் திரும்புகிறேன். உலகத்திலே ஆயுள் பாகம் என்பது மனிதன்தானே உண்டாக்கிக்கொள்கிற ஒரு சங்கதியல்ல. உண்மையாக உற்று நுழைந்து ஆராயப்போனால், எந்த சங்கதியும் பாடும் மனிதனால் ஆகிற காரியமாய் இல்லாமல், அணுப்பிரமாணமுங்கூட அய்யனிட்டஅமைப்புபோலவே அதது கூடியும் வாடியும் மோதியும் சேர்ந்தும் உடைந்தும் ஒட்டியும் பின்னிக் கொண்டும் நீண்டு கொண்டும் சுருங்கிக் கொண்டும் போகிறதே தவிர, இந்த அல்ப பிராணியாகிய மனிதப் பூண்டு தன்னால் சாதித்துவிட்டதாக ஒரு சிறுவிரல் அசைப்புச் சங்கதியில்கூடச் சொல்வதற்குக் காணோம் ! கடவுள் நோயைத் தீர்க்க வைத்தியன் பேர் பெற்றுக்கொள்ளுகிறானென்றநிலையில் அதது கைகூடிய கௌரவச் சங்கதியாய், ஏதோ எல்லாப் பெருமையுமே இந்த மானிட உருவைச் சூழ்வதாய். இந்த லோக மாய்கையில் அப்படியான ஒரு சந்த

79. உபசரித் தன்புடன் பரிமா றிடாத [illegible] வர்க் கன்னமாமோ ?



[illegible] காப்பக [illegible]
169827

கோலாட்டம் போடப் படுகிறதே தவிர உண்மையில் மனிதப் பிராணியால் நடக்கிற சங்கதி ஏதுமே இல்லை. ஆயினும் அவனாலேயே ஆகின்றதென்பது போன்ற ஒரு கௌரவப்பட்டச் சூட்டுமட்டும் அவனுக்குக் கொடுக்கப் படுகின்றது. ஆனாலுங்கூட அந்த சூட்சுமக் கயிற்றைக் கர்த்தனே இழுத்துப் பிடித்துக்கொண் டிருக்கிறார். பாரத யுத்தத்தில் அர்ச்சுனன் தேருக்குள்ளிருக்க, வெளிக்குக் குதிரைகளை இழுத்துப்பிடித்த கிருஷ்ண பகவான் தமது சித்தம் போலவே காரியங்களை நடக்கச் செய்துவிட்டு மேலுக்கு அர்ச்சுனனுக்குப் புகழும் கீர்த்தியும் உண்டாக்கின மாதிரியில் உலகத்தின் சங்கதிகள் நடந்து கொண்டு வருகின்றன. அதாவது ஆண்டவன் தானே யாவும் செய்துவிட்டு, அதை மனிதன் தன் சுயப் பிரயத்தனத்தாற் பண்ணுவித்தது போன்று நினைத்துக் கொள்ளும்படி மயக்குவிக்கின்றார். அப்படி ஒரு பக்கம் மயக்கினாலும், மற்றொரு பக்கம் தெளிவு ஞானம் உதிப்பதற்காக சுடச்சுட முதுகில் பலத்த அடிகளின் பூசையையும் தந்துகொண்டு தான் போகிறார். அவ்வாறானவற்றுள் இந்த ஆயுள் பிரமாண அதிசயமும் ஒன்றாகும்.

***

இனி அதற்கு அடுத்தபடியாக அநுபவப் பிராப்தி யென்பதொன்று அத்துடன் கூடவே இருக்கிறது. அதாவது ஒருவன் ஆயிரக்கணக்காகத் தேடி வீடு நிறையப் பெட்டி பெட்டியாய்க்கொட்டிவைக்கிறான். கோட்டி வைக்கிற விஷயம் வேறு, அதை அநுபவிக்கிற சங்கதிவேறு. அநுபவித்தால்தான் அவற்றைத்தேடியவன் அதனைச் சுகித்த சங்கதியாக அமையக்கூடும். அநுபவிக்க முடியாத கிழவனுக்கு அரம்பை எதிரில் நின்று என்ன செய்ய? ஒரு கவளம் அன்னம் உண்பதற்குள்ளாகவே வயிற்று நோய் வந்து கொள்கிற குன்மரோகஸ்தனுக்கு ஆயிரம் காணி நிலங்கள் இருந்தென்ன செய்ய? இரண்டு கவளம் சாப்பிட்டதற்கே சரிவர ஜீரணிப்பின்றி வாதை படுபவனுக்குப் பத்தெட்டு வகைப் பதார்த்தங்களுடன் சமைத்து இலையிற் படைத்து யாது பிரயோஜனம்? காலற்ற நொண்டிக்குத் துவிச்சக்கரவண்டிகள் நாலெட்டிருந்தும் காரியமென்ன? பல்லில்லாதவனுக்கெதிரில் கட்டுக் கட்டாய் கரும்பு இருந்து லாபமென்ன? ஆகவே சொத்து சேர்ந்திருப்பது மட்டும் போதாது. அதை அநுபவிக்கப் பிராப்தியும் இருக்கவேண்டும். அநுபவிக்கப் பிராப்தி யில்லாமல் ஆயுள் நீண்டு வாழ்வதிற் பயனென்ன? இந்த அனுபவப் பிராப்தி யென்ற சூட்சுமக் கயிற்றை ஆண்டவன் தன் கையில் வைத்துக்கொண்டு வெறுமனே சொத்துக்களைமட்டும் மனிதனுக்கு வாரளமாய் அளந்து கொண்டு போகிறார். அவற்றை அவன் அநுபவிப்பதென்பது, கடவுளின் கையில் இருக்கிறது. இதில் இன்னுமொரு வேடிக்கை. அன்றன்று உழைத்தாலன்றிக் கஞ்சிக்கு வழியில்லை யென்ற நிலையில் ஒரு ஏழைப் பூண்டைக் கடவுள் வைத்திருந்தாலும், ஏதோ கிடைத்த அரைவயிற்றுக் கஞ்சியில் அவன் பசியைத் தணியவைத்து அவ்வளவில் திருப்தியோடு கண்ணுறங்கும்படியான ஒரு பெரிய பாக்கியத்தை அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்துதவுகிறார். இந்தப் பெரும் பாக்கியத் திருப்தியைப் பணக்காரனுக்குப் பரமன் அளக்கவொண்ணாதா? அது

80. வெகு கடன்பட்டபேர் செல்கின்ற சிலவும் மிக்க சிலவமாகுமோ?



தானே காணோம்! எவ்வளவு சொத்துக்களிருந்தாலும், போதாதென்பதும், இல்லை யென்பதும், செலவுக்குக் கட்டி வரவில்லை யென்பதுமான அதிருப்திகரத்திலேயே அவனை விக்கிக் கொண்டு திண்டாடப் பண்ணி விடுகிறார். 'போது மென்ற மனமே பொன் செய்யுமருந்து' என்றபடி அந்தத் திருப்தியை அந்தப் பணத்தொந்தி மனுஷ்யனுக்கு உண்டாக்கினால் எவ்வளவோ பெரும்பாக்கியமாகுமே. அந்த சங்கதி அங்கே பூச்சியமாய் விடுகிறது. மேலுக்கு மேல் ஆசை அதிகப்பட்டுக்கொண்டே செல்ல, கையில் இருப்பதை அநுபவிக்கப் பிராப்தியற்று அவன் வாணாளும் முடிந்து மண்ணாக, பிறகு அவன் மிகுத்துத் திரட்டி வைத்துச் சென்றதை இன்னொரு மூன்றாவது மனுஷ்யன் அநுபவிக்கும்படியாய் விடுகிறது. ஆகவே, அநுபவப் பிராப்தி யென்ற பாகம் கடவுளின் அனுக்கிரகத்தைப் பொருத்த சங்கதியாய் ஆகிறது. ஆயுள் பாகமும் இப்படியே அநுபவப் பிராப்தியைப் பொறுத்த பாகமாய் நீண்டும் சுருங்கியும் இருந்து கொண்டு மாயாஜாலம் செய்கிறது.

***

அப்பால் இருக்கிறதப்பா, மூன்றாவதான பெருத்த சங்கதி! அதுதான் விலை மதிக்கவொண்ணாத அரியவரன். ஆயுள்பாகப்பிரிவிலே ஒரு திருப்தியும் பூரிப்புமான சங்கதி யது; குடிக்கக் கூழ் இல்லாவிட்டாலும், எவ்வளவு விசாரங்கள் வந்து சூழ்ந்து தொல்லை கொண்டாலும் அந்தனைத் துயரத்தையும் குழந்தையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு ஆறித் தேறிப் போகலாமென்று உலகத்தார் ஒரு வசனமாகச் சொல்லுகிறார்களே— அதுதான் அந்தப் புத்திரபாக்கியம்— பிள்ளைப்பேறு சங்கதி! இதற்காகத்தான் குஞ்சு குட்டியா யிருக்கையிலேயே அதற்குக் கல்யாணம் கல்யாணம் என்ற பேச்சை எடுப்பது. அதே நினைவாய் பெற்றோர்கள் இருப்பது. எப்படியாவது பையனுக்கு ஒரு கால்கட்டு கட்ட வேணும், கல்யாணம் பண்ணவேணு மென்பது. அதற்காக அழகுபெண் தேடப் புறப்படுவது. பத்துவித பொருத்தங்கள் பார்ப்பது. பல கடன்கள் பட்டுக் கல்யாணத்தை நடத்துவிப்பது. சோபன அறை சிங்காரிப்பது. சாந்தி முகூர்த்தம் செய்விப்பது. மங்களம் பாடுவது. இதுவரைக்கும் மனிதன் சங்கதி முடிகிறது. ஆனால் அதற்குப் பிறகோ புத்திரப்பேறு விஷயத்தை அகில லோகநாயகன் தன் கைக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார். ஆதலின் கல்யாணப் பொருத்தமே அய்யன் அளந்த அமைப்புபோல்தான் முடிகிற படியால், அதற்குத் தகுந்தபடி புத்திரப்பேறு விஷயமும் அவரது சித்தத்தின்படியே நடப்பதாகிறது. இதில் ஆண்மலடு, பெண்மலடு, வயிற்றுவலி, கர்ப்ப அழிவு முதலிய சிக்கல்களை யெல்லாம் உட்புகுத்தியிருப்பதால், இவ்வளவையும் தாண்டிச் சென்று கரையேறிப் புத்திர பாக்கியத்தைக் காண அய்யன் திருவருளின்றி ஏதுமே ஆகிறதில்லை. வேண்டும் வேண்டுமென்று எதிர்பார்த்து ஏங்குகிற சீமானுக்குப் புத்திரப்பேற்றை இல்லையென்று மறைத்துவிடுவதும், வேண்டாம் வேண்டாம் என்கிற ஏழைக்கோ இன்னும் ஏழெட்டு குஞ்சுகுட்டிகளை உண்டாக்கி விடுவதும் பெரிய விசித்திரம்!

***

மேலே விகடன் பேசிய மூன்றில் முந்தி வந்து முட்டிக்கொண்டு

81. எந்நாளும் வருமன்மை தீமை தன தென்னவே யெண்ணிவருவோன் பந்துவாம்.

நிற்பது ஆயுள் பிரமாண சங்கதி! இந்த ஆயுள் விருத்தி ஆணுக்கா பெண்ணுக்கா என்பது விகடன் தொடங்கிக்கொண்ட கேள்வி. அந்தக் கேள்வியை ஆரம்பிக்கப்போக அதைத் தொடர்ந்து பின் இரண்டு சங்கதிகளும் வந்தன. ஏன் வந்தனவென்றால் ஒன்றுக்கொன்று தொடர்பு—சம்பந்தம் இருந்துதான் வந்தன. முதலாவது மனிதன் இங்கு உயிர் வாழ்வதற்கு வேண்டிய சங்கதி ஆயுள் பாகம். அதற்கு அப்பால் அவனுக்கு அய்யன் அளந்திருக்கிற அநுபவப் பிராப்திக்குத் தக்கபடி அந்த ஆயுள் நாள் எண்ணிக்கை குறைந்தும் பெருகியும் முறிந்தும் போகிறது. இப்படியாக ஆயுளும், அதை ஏற்றுத்தாங்க அநுபவப்பிராப்தியும் கூடிக்கொண்டு வெகுகாலம் வரைக்கும் அது நீண்டு கொண்டு போவதாகவே வைத்துக்கொண்டாலும், மூன்றாவதான புத்திரப்பேறு ஒரு மனிதனது வாழ்வில் கூடிக்கொள்ளாவிட்டால், அவன் எவ்வளவு ஆயுள் பெற்றிருந்தாலென்ன, அந்த ஆயுளையோ, அல்லது உலகத்துப் பல்வேறு சுகங்களையோ கண்டு ருசிக்க அநுபவப் பிராப்தி கொண்டிருந்தாலென்ன, அவ்வளவும் "பிள்ளையில்லாத பாக்கியம் பெற்றிருந்துமென்ன சிலாக்கியம்" என்பதுபோல் வீணாய் மணமில்லாத மலராய் முடிகிறது. அந்த மனுஷ்யனும் பிள்ளைக்காகக் காலமுற்றும் ஏங்கி அழுவாரற்ற பிணமாய்ச் சாகிறான். அவனுக்குப் பின்பு பேர் சொல்ல யாருமின்றி நாதியற்றவனாகிறான். ஆகவே, ஆயுள் பாகத்தோடு அதைச் சிறப்பிக்க மற்ற இரண்டும் கூடி வரவேண்டியிருப்பதால் அதையும் சொல்லவேண்டியதாகி, அதற்கும் ஒருவகையில் விகடன் என் திருவாயைத் திறந்துவிட்டேனாதால், இனி தொட்ட விஷயத்தைக் கிட்டிக் கொள்கிறேன். இந்த ஆயுள் விருத்தி கண்டறிவதற்குத்தான் விவாகத்துக்கு முன்னே ஜாதகங்கள் பார்ப்பது. எல்லா வகைப் பொருத்தத்திலும் ஆயுள் பாகமே முக்கிய சங்கதி. அதற்காகத்தான் வெகு சிரத்தையோடும் ஆராய்கிறார்கள். ஆயினுமென்ன, ராமருக்குப் பட்டாபிஷேகத்துக்கு வைத்த லக்கின முகூர்த்தமே வனவாசத்துக்கும் வைத்ததாக மாறிப் பேதப்பட்டுக் கோணலாகிப் போயிருக்கையில் மற்ற மனிதப் பூண்டுகளுக்குத் தவறிப்போகக் கேட்பானேன்? இதிலும் 'அநுபவப் பிராப்தி' என்கிற விஷயம் கலந்துகொள்வதால் அய்யன் அமைத்த அளவுப்படியே முடிகிறது. சோற்றுக்குத் தாளம்போடும் பெண் நீண்ட ஆயுளுடன் இருக்க, அன்புள்ள நாயகன், தங்க விக்கிரகம் போன்ற குழந்தைகள், வீடுமனை, சொத்து யாவும் இருந்தும் சில பெண்மணிகள் ஐயோ, கண்ணை மூடிக் கொள்கிறார்களே! இவ்விதமே ரூபவதியான மனைவியும் மக்களும் மற்றுமுள்ள பாக்கியங்களுமிருக்க வீட்டுக்கு ஒரே மனுஷ்யனாயிருப்பவன் கர்த்தரின் அடிசேர்ந்து விடுகிறானே! வயிற்றுக்கில்லாத விகடனைப்போன்ற பிச்சாண்டிகள் வெகு கால வாழ்வு வாழ்கிறார்களே! இதென்ன விநோதம்? அதுதான் அந்த 'அநுபவப் பிராப்தி' என்பதற்குப் பொருத்தமாக ஆயுள் பாக சங்கதியும் கூடிக்கொள்கிற விஷயமாகும். விகடன் மேலே தெரிவித்த ஆயுள்பாகம், அநுபவப் பிராப்தி. புத்திரப் பேறு—இந்த மூன்று விஷயங்களும் மானிட

82. கற்றோரென்பதைச் சிலமுடனே சொல்லுங் கனவாக்கினுங் காணலாம்.



வாழ்வில் ஒன்றுக்கொன்று பின்னிக் கொண்டு நிற்பதால்தான் ஒன்றைத் தெரிவிக்க வந்த இடத்தில் அதன் கூட்டுறவான மற்ற இரண்டையும் விவரிக்கவேண்டியதாய் வந்தது.

* * *

இனி மறுபடியும், "ஆயுள்விருத்தி ஆணுக்கா—பெண்ணுக்கா?" என்கிற கேள்வியைக் கேட்டுக் கொள்ளத் தொடங்குகிறேன். தாரணிமீது ஆயிசு வளர்வதற்குக் காரணம் பலவாயினும், மரத்துக்கு வேர் எப்படி ஆதார பூதமோ, அப்படியே ஜீவராசிகளுக்கும் மூளையே வேர். அதிலிருந்துதான் நரம்புகள் உற்பத்தியாகி தேகாதியந்தமும் கிளைகிளையாயோடி கொடி கொடியாய்ப் பரவுகின்றன. ஆகையால் மூளையில் எந்தக் காரணத்தினாலாவது நலிவு நேர்ந்தால் வேரற்ற மரம்போல் வெகு ஜனுதியில் பட்டுப்போகும்படி நேரிடுகிறது. இதில் மனித ஜீவராசிகளுக்கு மற்றவைகளின் மூளைகளுக்கு இருக்கும் உழைப்பைவிட அதிகம். ஏனென்றால், ஐயறிவு அடையப் பெற்று அதன்மேல் பகுத்தறிய வேண்டிய உபாதை ஒன்றும் அதிகமாயிருப்பதால்தான். இந்த மானிட வகுப்பில் ஆண், பெண் என இரு பாலார் இருப்பதில், இவர்களில் பெண்களே நீடித்த ஆயுளோடு இருப்பதாக ஒரு துரைத்தன அறிக்கை கூறுகிறது. ஸ்திரீகளைவிடப் புருஷர்களுக்கு மூளை வேலை அதிகமென்றும், அதோடு மனக்கவலையும் ஆடவர்கட்கு மிகுதியென்றும், அதனால் சீக்கிரம் வலிவு குறைந்து அந்தியம் நேரிட்டு விடுகிறதென்றும் இங்கிலாந்திலுள்ள வைத்தியர்கள் தங்கள் அநுபவத்தால் நிச்சயிக்கின்றனர்.

* * *

மேலும், அந்த வைத்திய நிபுணர்கள் தங்களின் அநுபவத்தைப் பற்றி மொத்தமாகச் சொல்லினரேயன்றி இன்ன தேசத்தாரில் இப்படி, இன்ன ஊராரில் இப்படி என்று வகையறுத்துக் கூறவில்லை. ஆனதால் நமது இந்திய நாட்டின் பல பாகங்களிலுள்ள நடையுடை பாவனை ஜீவனம் முதலியவற்றைப்பற்றி இந்த விகடன் ஆராய்ந்து அறிய வேண்டியவனாகிறேன். முதல் திருஷ்டாந்தமாக, பர்மா தேசத்தில் நமது நாட்டில் ஆண்பிள்ளைகள் செய்துவரும் வேலைகளாகிய அதாவது வண்டி ஓட்டல், சுமை சுமத்தல், ஏர் உழுவுதல், ஏற்றமிறைத்தல், கடை விற்றல் முதலிய வேலைகளை அரிவையர்களே செய்ய, ஆடவர் சூதாடுவதும், சமையல் செய்வதும் தங்களுக்கு உரித்தான வேலையென்று கவலையற்றிருக்கின்றனர். அத்தேசத்து மரணக் கணக்கை விகடன் அறியானாயினும், பார்வையில் இருபாலாரும் ஒரே விதமாகவே செத்தும் இருந்தும் வருவதாகத் தோன்றுகிறது. இதைவிட வடதேசத்து ஜனங்களைப் பற்றி யோசித்தால், இவர்கள் தென்தேசத்தாரைவிட ஆண் பெண் இருபாலரும் திடகாத்திரமும் வலிவும் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களிலும் ஆண்பாலாரைவிடப் பெண்பாலாரே எதிலும் சிறந்தவர்களாக இருக்கின்றனர். நம்முடைய பகுதியாகிய சென்னை முதலிய நாடுகளில் மாத்திரம் பெண்களைவிட ஆண்கள் மேற்சொன்ன விஷயங்களில் சிறந்திருக்கின்றனர். மொத்தத்தில் எத்தேசத்தினரிலும் ஆண்பிள்ளைகளுக்கே அதிக கவலைகளும் துன்பங்களும் மூளையைப்பற்றிய வேலைகளும் இருப்பதாகவும், பெண்களுக்கு சரீரப்

83. கற்புளாரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு கானடையினுங் காணலாம்.

பிரயாசை மாத்திரம் அதிக மிருப்பதாயும் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் நம்மனுபோகத்தில் காண்பதைவிட விகடன் கிஞ்சித்து அதிகம் சொல்ல வேண்டியிருப்பது என்னவென்றால், உலக இன்பம் பலவாறாயிருப்பதில், தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி ஆசைகொள்ளாமல் அளவுக்கு மேற்பட்டு விரும்புவது பெண்களுக்கே உள்ள ஒரு துர்க்குணம் என்பதே. புருஷர்களின் மாத வருமானத்தில் கால்பாகத்தைப் பெண்கள் மேனிமினுக்கச் செலவு செய்துவிடுவதாய் லாலா லஜபதிராய் சொல்லுகிறார். ஆகையால் இந்தப் பெண்களைத் திருப்திசெய்யப் புருஷர்கள் படும்பாடு தெய்வத்துக்கே பிரீதி. அப்படியாக இவர்களைத் திருப்தி செய்யாவிட்டாலோ ஆடவர்களுடைய பலவித சுகங்களுக்கும் கஷ்டமே. எனவே, பெண்களைத் திருப்திபடுத்த ஆடவர்கள் மட்டுக்கு மீறிய மூளையின் உழைப்பை யேற்று சீக்கிரம் உலகைத் துறக்கிறார்களென்பது மற்றொருவித அநுபவம். இந்தப்படியாக ஆணுக்கு ஆயுள்பாகம் குறைகிறதாம்.

***

இதோடு பெண்கள் சுயேச்சையாய் நடக்கக் கட்டவிழ்த்து விடாமல் பலவித நிர்ப்பந்த விலங்குகள் பூட்டப்பட்டும், ஆடவர்போல் மதிமருண்டு நடத்தைப் பிசகினால் பிராயச்சித்தத்துக்கு வழியில்லாமலும், கெட்ட பால் நல்ல பாலாகாதென்பதுபோல் மறுபடி மனந்திரும்பி உத்தமிகளாக முடியாதிருப்பதாலும், ஆண் பிள்ளைகள் போல் பலவித விபசார துர்வழிகளுக்குப் பிரவேசிக்கமுடியாமல் பதிவிரதைகளாக இருக்கவேண்டியவர்களாவதில், இரத்தம் குறையவேனும், இதாளுடைய உடம்பின் வியாதிகள் பற்றும் வழிகளேனும் இல்லாமல் சுகஜீவிகளாய் நீடித்தவாழ்வு காணச் சாத்தியப் படுகிறதால் அவர்களுக்கு ஆயுள்பாகம் பெருக் கடைகிறதாம். எது எப்படி ஆனாலும், ஆண் பெண் இருபாலாரிலும் காம இன்பத்தை எவர் மிதமாய் சுகிக்கின்றனரோ, அவர்களே நீடித்த ஆயுள்கொண்டிருப்பார்களென்பது திண்ணம். இதற்கு உதாரணமாக சந்நியாசிகள், யோகிகள், தபோதனர்கள் முதலானோர் நெடுங்காலம் சுக ஜீவிகளாயிருப்பதைப் பார்க்கலாம். இதுவுமல்லாமல் சில குடும்பங்களில் 50-வயதுக்கு மேல் எவரும் இருப்பதில்லை. சில குடும்பங்களில் ஆயுள்பெருக்கு அதிகரித்துக் காண்கிறது. இதற்குக் காரணமும் உண்டு. வித்தின் வலிவுக்குத் தக்கப்படி விருக்ஷம் தழைத்து வளர்ந்து நிலை கொண்டிருப்பது போல, அந்தந்த வமிஷத்தினது தாதுவின் தன்மைக்குத் தகுந்தாற் போல் சிசு உற்பத்தி யிருப்பதால் அற்ப ஆயிசும் பெருகிய ஆயுசும் இதை அடுத்தே அமைகிறது. இத்யாதி காரணங்களால் இன்னாருக்குத்தான் ஆயுள் விருத்தி, மிகுதி என்று ஒரு திட்டப்படுத்துவதற்கில்லாமல், அந்த அதிக ஆயிசு கொண்டு ஜீவிப்பவர்களின் விஷயம் கடவுளினுடைய அளவில்லாத கிருபா நோக்கத்தின் காரணமாயிருக்கிறதல்லாது வேறல்லவென்பது விகடனுடைய அபிப்பிராயம். அதாவது ஆயுள் பாகம், அநுபவப்பிராப்தி, புத்திரப் பேறு இம்மூன்றும் கடவுளின் சித்தத்தைப் பொறுத்தது என்பதான முடிவுக்கு விகடன் சுற்றிச் சுற்றிக் கடைசியில் வருகிறேன். நீங்களும் இக்கருத்துக்கு நெருங்கி வாருங்கள்:—ராம் ராம்! சுபம்! ஓ!! சுவாஹா!!!

84. வீரமுடையோரென்ப தோங்கிவருதைர்ய விசேடத்தினாலறியலாம்.




## ஜப்பானிய ஸ்திரீகள்

ஜப்பான் தேசம் பலவகையிலும் விநோதமானதென்று பார்த்தவர்களெல்லோரும் சொல்லி வருகிறார்கள். ஆனால் அத்தேசத்திய விசேஷங்களிலெல்லாம் விசேஷமானது அவ்விடத்திய ஸ்திரீ ஜாதியாம். ஏனெனில், அவர்களைப் பார்த்தவர்களுக்கெல்லாம் அவர்களிடத்தில் ஒருவிதமான அன்பும், மரியாதையும் தானாக உண்டாகிறது. அழகுமட்டும் இதற்குக் காரணமாகாது. ஜப்பானிய ஸ்திரீகள் அநேகமாய் எல்லோரும் சுந்தரிகள்தான். என்றாலும் அவர்களுக்கு ரூபத்தைவிடக் குணமே பெருத்த பூஷணம். நாணம், மடம் முதலிய பெண்மைக்குரிய விசேஷ குணங்கள் இவர்களிடம் எங்கும் காணலாம். அதுதான் இந்த மரியாதைக்கும் அன்புக்கும் காரணமாவதென்று தெரிகிறது.

***

ஜப்பானிய ஸ்திரீகள், நமது தேசத்து உத்தம ஜாதி ஸ்திரீகளைப் போலவே 'அடக்கம்' என்பதை முதல் தருமமாகக் கொண்டவர்கள். சிறு பெண்ணானால் தகப்பனுக்கும், பெண்சாதியானால் புருஷனுக்கும், விதவையானால் மூத்தமகனுக்கும் அவர்கள் அடங்கி நடக்கவேண்டியவர்கள். எழுதப் படிக்கவும், வீணை முதலிய வாத்தியங்கள் வாசிக்கவும், கூத்தாடவும், கொஞ்சம் காவியம் வாசிக்கவும் அவர்களில் அநேகமாய் எல்லோரும் கற்றுக்கொள்வது வழக்கம். கல்யாணம் பெற்றோருடைய மனம்போல் நடப்பதால், மேனாட்டாருடைய 'சுயம்வர' லக்ஷணங்களும், பர்த்தாவும் பாரியையும் இஷ்டம்போல் காகிதப்பத்திரங்கள் எழுதிக்கொள்வதும், ஒருவரை யொருவர் நினைத்தோ நினைப்பதாகப் பாசாங்கு செய்தோ பிதற்றுவதும், மற்றபடி பேய்க் கூத்தாடுவதும் ஜப்பானியருள் காணுவதில்லை.

***

85. மனமொத்த நேயமொடு கூடியொருவர்க்கொருவர் வாழின்வெகு வெற்றி பெறலாம்.

பழய நாளில் ஜப்பானிய ஸ்திரீகள் கல்யாணத்தன்றைக்குத் தங்கள் பற்களைக் கருப்புச்சாயம் போட்டுக் கரேலென்று செய்துகொள்வார்கள். 'தலைச்சன்' பிறந்ததும் புருவங்களைச் சிரைத்து விடுவார்கள். இம்மாதிரி வழக்கங்கள் இக்காலத்தில் அநேகமாய் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஆனால் குலஸ்திரீ யென்பவள் புருஷன் வீடுவந்து சேர்ந்தால், வீடேதான் அவளுக்குக் கதி. அதைவிட்டு நகருவதற்கு இடமில்லை. புருஷன் எங்கு வேண்டுமானாலும் போகிறான். எல்லாருடனும் கலந்து களிக்கிறான். பெண்சாதிக்கு இம்மாதிரிப் பிரபஞ்சமே கிடையாது. புருஷனுக்குப் பல நாட்டாருடைய பழக்கத்தினாலும், படிப்பு, கேள்வி முதலிய சாதனங்களாலும், தொழில் வைபவத்தினாலும் உலகம் பலவகைத்தென்பது தெரிகிறது. பெண்சாதிக்கோ உண்டுடுத்துச் சுகிப்பதும், மக்கட்பேறும் தவிர வேறு அனுபவமில்லை. ஆதலால் இம்மாதிரித் தம்பதிகளுக்குள் மேனாட்டுத் தம்பதிகளுக்கிருக்கும் லக்ஷணங்கள் காணுவது அபூர்வம்.

* * *

ஜப்பானியருள் கல்யாணமென்பது, விவாகம் நடந்ததற்கு ரிஜிஸ்திரார் ஆபீஸில் பதிவாவதுதான் சாக்ஷி. இப்படி இருப்பதால் இல்வாழ்க்கை வேண்டாமென்றால் ஒழித்துவிடலாமென்று அநேகர் நினைக்கலாம். ஆனால் வாஸ்தவத்தில், இரு கக்ஷியாருடைய பந்துக்களும் குடும்பத்தவரும் சேர்ந்து அநியாயம் நடக்கவொட்டாமல் பார்த்துக்கொள்வதுதான் சாதாரணமாக நடப்பில் காணுவது. பிரிவதென்றால், இந்தியாவில் காணுவதுபோலப் புருஷன் மட்டும் பிரிவதென்றில்லை. பெண்சாதியும் தக்க நியாயம் கொண்டு வேண்டுமானால் பிரிந்து, மறுபடி கல்யாணம் செய்து கொள்ளலாம்.

* * *

"பல பெண்ஜாதிகள்" ஜப்பானியருள் கிடையாது. சட்டப்படியும் ஒரே பத்தினிதான் பாரியை யென்று சித்தாந்தம். ஆனால் இந்துக்களில் பழய நாளில் சொகுசுக்காரர் பலர் செய்து வந்தபடி விலைமாதர் அநேகம் கிரகஸ்த குடும்பங்களிற் காணுவார்கள். என்றாலும், இப்பொழுது நமது நாட்டில் இது எப்படிக் குறைந்து வருகிறதோ அப்படியே ஜப்பானியரிலும், பெரிய மனிதர்களுக்குள் இந்தத் துர்லக்ஷணம் குறைந்தே வருகிறது. இப்படி யெல்லாமிருந்தாலும், ஜப்பானிய ஸ்திரீக்கு மரியாதைக்கொன்றும் குறைவில்லை. அவளைப்பற்றிப் பேசுபவரெல்லாம் "யஜமானி அம்மாள்" என்றே வழங்குவார்கள். அவளுக்கு எல்லாவகை மரியாதையும் வைப்பார்கள். அவளும் தன் மரியாதையைக் குறைத்துக்கொள்ளாமல், மகா பதிவிரதையாய்ப் புருஷனுக்கு

86. கைப்பொருளி லேவரு மருத்துவர்க் கோசயங் கைவிசேடந் தன்னிலே,



அடங்கியே தான் நடப்பாள். இப்போதிருக்கிற ரீதிக்கு, மேனாட்டு முறை என்பது முக்கியமாய் மந்திரிகள் முதலிய வெகு பெரிய மனுஷரிடம் மட்டுமே காணுவது. ஆனால் நாகரீகம் வெகு துரிதமாக முற்றுவதால் இப்போது குழந்தைகளா யிருப்பவர் பெரியவர்களாகும்போது, மேனாட்டு முறையும் அதிகமாகப் பிரபலிக்கும். அக்காலத்தில் அவர்களுக்குள் மேனாட்டு முறையின்படி காணும் உத்தம லக்ஷணங்களும், கோர லக்ஷணங்களும், இரண்டு பிரபலிக்கும்.

* * *

"ஜப்பானியர் நாம் செய்துகொள்வதுபோல் காது, மூக்கு முதலியவைகளைத் துளைத்துக் கண்டதை யெல்லாம் தொங்கவிட்டுக்கொண்டு உபத்திரவப்படுவதில்லை. கையில் வளை முதலியவைகளையும், விரலில் கணக்கற்ற மோதிரங்களையும் போட்டுக்கொண்டு இம்சைப்படுவதுமில்லை. மேனாட்டாரைப்போல் மார்புக்கு எலும்புகளினாலோ, இரும்புத் தகடுகளினாலோ, ஆக்கிய கவசம் தரித்தும், கால்களுக்குப்போதாத மோஜாக்களைத் தரித்தும் உடம்பைக் கோணலாக்கிக்கொள்வதில்லை. தலையில் பெருங்கூடைகளைக் கவிழ்த்துக்கொண்டு, அதில் உலகிலுள்ள பக்ஷிகளின் இறகுகளை யெல்லாம் சொருகிக்கொள்வதுமில்லை என்று ஒரு இஃநடர் எழுதுகிறார். இது வாஸ்தவம். ஜப்பானிய ஸ்திரீகளின் உடையும், ஆபரணங்களும் வெகு விநோதமானவை. அவைகளால் அவற்றைத் தரிப்பவருக்கு ஒரு உபத்திரவமுமில்லை. ஆனால் இப்போது மேனாட்டாருடன் ராஜரீக விஷயமாய்ப் பழகவேண்டி யிருப்பதால், அதற்காக அநேகர் மேனாட்டு வேஷந் தரிக்கவேண்டி யிருக்கிறது.

* * *

ஜப்பான் தேசத்தில் பெற்றோர் தமது பெண்களை விற்று ஜீவிக்க வேண்டினால் அவர்களைக் 'கோஷாக்கள்' ஆக்கலாம். இப்படிச் செய்பவர்கள் தமது பெண்களை யாரோ ஒருவருக்கு பதினான்கு அல்லது பதினைந்து வயதாகும்போது, சுமார் 150 அல்லது 250 ரூபாய்க்குக் கொடுத்துவிடுகிறார்கள். வாங்கியவர் அவளுக்குப் பாட்டு, கூத்து முதலிய வித்தைகள் சொல்லுவித்து, நல்ல ஆடையாபரணங்களிட்டு, ஆதரித்து வருகிறார். நாட்டியம் தெரிந்ததும் இவர்களுக்குப் புதுப்பெயர்கள் பிரபலித்து வழங்குகின்றன. 'வஸந்தமல்லிகா' 'சந்திரவதனா' என்பவைபோன்ற பெயர்கள் பிரபலிக்கும். இவர்கள் 'சாயைக்கிளப்புகள்' 'கச்சேரிகள்' இவைபோன்ற இடங்களுக்குப் போய் அவ்விடம் பொழுதுபோக்க வருபவர்களுக்குப் பாட்டு முதலிய சாதனங்களால் உபகரித்து ஒருமணிக்கு இவ்வளவென்று சம்பளம் பெற்று வயிறு வளர்க்கிறார்கள். வரும்படியில் முக்கால் வரிசையும் இவர்களை வாங்கி வளர்த்தவர் எடுத்துக்கொள்வது வழக்கம். நல்ல ரூபமும், சாதுரியமும், வித்தையுமுள்ளவர்க

87. தனக்குவெகு புத்தியுண்டாகினும் வேறொருவர் தம்புத்தி கேட்க வேண்டும்.

ளுடைய பெயர் எங்கும் பிரபலிக்கும். வரும்படியும் அதிகரிக்கும். இப்படிப் பல வருஷங்களாகையில், ஒருநாள் இருந்தாற்போலிருந்து அவர்களில் இரண்டொருவர் காணுவதில்லை. எங்கு விசாரித்தாலும் சங்கதி தெரிவதில்லை. எங்கே போனார்கள்? யாரோ ஒருதனிகன் இவர்களில் யார்பேரிலோ பிரியப்பட்டு, அவளை வாங்கி வளர்த்தவனுக்குப் பரிசு ஏராளமாகக்கொடுத்து, அவளைத் தனக்கு மனைவியாக வாங்கி விட்டானென்று தெரிகிறது. 'அவள் போய் விட்டாள்!' ஆனால் இந்தப்படிக் கோஷாவாகக் காலங் கழித்தவர்களுக்குக் குலஸ்திரீயினுடைய தருமம் ருசிப்பது வெகுஅபூர்வம். என்றாலும், ஜப்பானியருடைய நாகரீகம் முற்ற முற்ற இந்த ஸம்பிரதாயமும் மாறிவிடும் என்று தெரிந்தவரெல்லாம் எழுதி வருகிறார்கள். நமது நாட்டிலும் பழையபடி 'கச்சேரிகள்,' (பாட்டு, சதிர், கூத்து முதலியன) குறைந்தே காணுகின்றன. இவ்வளவிற்கு அதை நல்லதாகவே சொல்லலாம். மங்களாம்பிகா பாய்.

[ஜப்பானிய மாதர்களின் நிலையும் நாகரீகமும் இன்னவிதமென ஒருவாறு இதனால் விளங்கும். அந்தந்த தேசத்தார் அந்தந்த தேசத்தின் நாகரீகங்களைக் காப்பது அவரவர் தருமம். ஆனால் கூடா வொழுக்கங்களையும் ஆபாசமானவைகளையும் தங்களின் அறிவின் பெருக்கால் இன்னின்னவை யென்று கண்டுகொண்டு அவற்றை விலக்கித் தம்தேச நாகரீகத்துக்கு இன்னும் சிறப்பை யுண்டுபண்ணுவது உத்தமமாகும். அவ்வழிகளிற் பிறநாட்டினரிடத்துக் காணப்படும் சுப லக்ஷணங்களுள் சிலவற்றை யேற்றுத் தங்களுடன் கலந்து கொள்ளுதலும் நல்லதுதான். ஆனால் விபரீத வழியில் ஆடம்பர வகையிற் செல்லவொண்ணாது. நமது பூர்வ ஆசாரத்திற்கும், நாகரீகத்திற்கும், நமது நன்னடக்கை, மானம் இவைகளுக்கும், பழுதுண்டு பண்ணுறிருப்பனவற்றை மட்டுமே ஏற்பதுதான் சிரேயஸ்கரம். ஆங்கிலேயரைப்பார்த்து 'இந்தியக் கிறிஸ்துவ' மரபினரும், இவர்களைப் பார்த்து ஹிந்துக்களும் பாதி துரைசான்களாக மாறி, அங்கமெல்லாம் தெரியக்கூடிய மெல்லிய வஸ்திரங்களையும், அவற்றாலான ரவிக்கை முதலியவைகளையும் ஏற்று, அந்த ரவிக்கையையும் கழுத்திற்கு அப்பால் வருமாறு அணிந்து, இவைபோன்ற பலவற்றில் மனம் சென்று அலங்கோலப்படுவதை உத்தம வொழுக்கமென்றும் உயரிய நாகரீகமென்றும் எப்படிச் சொல்லமுடியும்?—ப—ர்.]

---

அபினி தின்னும் வழக்கமுடைய ஒருவன் அபினை மேஜையில்வைத்து வெளியே போனான். அவனுடைய இரு பெண் குழந்தைகளும் அதைப் பக்ஷணமென்று நினைத்துத் தின்றுவிட்டன. பிராணனும் பிரிந்தது. பிறகு தந்தை வீட்டுக்கு வந்து பார்க்கையில் இவ்வித ஸம்பவம் நடந்திருக்கக்கண்டு மிகவும் துக்கித்தான். கெட்ட பழக்கம் கேடு விளைத்தது. மற்றவர்கட்கும் இது எச்சரிக்கையா யிருக்கட்டும்.

---

88. கனக்கின்ற வித்வானாகினுந் தன்னிலுங் கற்றோரை சுத்தவேண்டும்.




## சரபம் முத்துசாமிக் கவிராயர்.

முத்துசாமிக் கவிராயர் கோயமுத்தூர் ஜில்லா உடுமலைப் பேட்டையில் 1863-வது வருஷத்தில் பிறந்தவர். இவர் உடுமலைப் பேட்டையிலுள்ள ஹைஸ்கூலில் சேர்ந்து வாசித்து வருங்காலத்தில் பாடசாலை இன்ஸ்பெக்டர்கள் வரும்பொழுது வந்தனோபசார கீதங்களையும் மங்களங்களையும் தமிழில் தாமே இயற்றி அவற்றை இனிமையாய்ப்பாடி அவர்களுக்கு ஸந்தோஷமுண்டாகும்படி செய்வார். இவர் 1881-ம் வருஷத்தில் மிடில்ஸ்கூல் பரீக்ஷையில் தேறினார். மேலும் மேலும் படிக்கவேண்டுமென்ற ஆசை இவருக்கு மிகுதியும் உண்டாயினும், இவர் மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசிக்கும்பொழுது இவர் தந்தையார்க்கு வியாபாரத்தில் நஷ்டமுண்டாய் விட்டதால் படிப்பை நிறுத்திவிட நேரிட்டது. குடும்ப கஷ்ட நிவர்த்திக்காகப் பொருளீட்டற் பொருட்டு இவர் ஊரைவிட்டு வெளியேறினார். அச்சமயம் பழனிஸ்தலம் மாம்பழக்கவிராயர் அவர்கள் சந்திரவிலாஸத்தை யியற்றி அதை அரங்கேற்றுவிக்கத் தகுந்த பிரபுவை நாடி ஊர்ப்பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அந்த சமயம் அவரிடம் கையேட்டுக்காரராக முத்துசாமிக் கவிராயர் சேர்ந்து தமிழ் ஜில்லாக்களுக்கெல்லாம் சென்று பல பிரபுக்களுடைய மதிப்பையும் தயவையும் பெற்றார். மாம்பழக் கவிராயரவர்கள் இயற்றும் இனிய கீர்த்தனங்களை முத்துசாமி பாடக்கேட்கவேண்டுமென்று அந்தக் காலத்தில் தெற்கு ஜில்லாக்களில் சொல்வதுண்டு. இப்படிச் சில வருஷங்கள் கழிந்தன.

அதன் பின்னர் இவர் சிலகாலம் புலவர் புராணம் இயற்றிய தண்டபாணி ஸ்வாமிகளுக்குச் சீடராயிருந்து அவர்பால் சந்தஇலக்கணமும் பயின்றார். அதன் பின்பு இவர் பலஹைஸ்கூல்களில் தமிழ்ப்பண்டிதரா யிருந்தார். 1903-ம் வருஷம் கன்னிவாடி ஜமீன்தார் இவரை சமஸ்தான வித்வானாக வைத்து ஆதரித்து வந்ததை,

"நாணியம் பும்பாடலுக்கு ஞாபகமென்நாளு நிற்க
வாணியம் பூத்தந்த மகாராசன்— வாணியஞ்சேர்
ஆத்தானக் கன்னிநகர் அப்பைய சாமியெனைக்
காத்தானெனக் காத்தான் காண்"

என்னும் வெண்பாவை நன்றியறித லடையாளமாகக் கூறியுள்ளார். இவருக்குச் சரபகவி என்ற பட்டம் ஜமீன்தாரால் வித்வ கோஷ்டியில் அளிக்கப்பட்டது.

---

89. தொனிக்கின்ற சங்கீத சாமர்த்திய னாகிலுஞ் சுதிகூட்ட வொருவன் வேண்டும்.

ஒரு முறை ஜமீன்தார் யாது காரணம்பற்றியோ இவர் மீது கோபித்துக் கொள்ள இவர் சமயோசித சாதுர்யமாய்,

விண்ணிற் கம்மிக் குமுறியிடி
வீழ்த்தி வெகுபே ருயிரையிந்த
மண்ணுக்கிரையாப் பண்ணுமென்று
மழைமேகத்தை வெறுப்பதுண்டோ?
தண்ணிற்பொலியுந் தடங்கன்னித்
தலத்தைப்புரக்குந் துரைப்பாண்டியா
எண்ணிப்பார்க்கிலுன் கோபமெல்லா
நமக்கு யோகமரோ ?

என்று சொல்லிக் கோபத்தை யாற்றினர்.

கன்னிவாடி ஜமீன்தார் காலமாக, இருவருக்கு ஆதரவில்லாமற் போயிற்று. அதன்பின் தமிழ் நாடகசாலைகளிற் பிரவேசித்துப் பல நாடகங்கள் இயற்றினர். எண்ணற்கரிய பாடல்களைச் செய்தார். அவைகள் அனைத்தும் எட்டுப் பிரதியாகப் பல இடங்களில் சிதறின. பாசுரசேகரம் என்ற பக்தி ரஸமான நூலும், வேறு சிறுசிறு பாடல்களும் அச்சிடப்பட்டு மறைந்தன. இவர் இயற்றிய இராம நாடகம் ஒன்றுதான் தற்போது அவர் பெருமைக்கு அறிகுறியாய் விளங்குகின்றது. எளிய நடையில் உயரிய விதமாகக் கவிதைகள் புனைவதில் அவருக்கு நிகர் எவருமில்லை. அவரது பாடலுக்கே தனியழகு ஒன்று இயற்கையிலேயே அமைந்திருந்தது. பாடலைக் கேட்டதும் அவர் இயற்றியதென்று நன்றாகத் தெரியவரும். “மஹாலோபி நாடகம்” என்ற சிறந்த நாடகநூலொன்றை வெகு காலத்திற்கு முன்னதாகவே இயற்றி யிருந்தனரேனும் அது அச்சிடப்படாமலே போய்விட்டது.

முத்துசாமிக் கவிராயர் சிறிதும் ஆடம்பரமற்றவர். அவர் கல்வியே அவருக்குத் தெரியாது. எப்போதும் அடக்கமான குணமுள்ளவர். சினேகப் பிரியர். தயாள மனது படைத்தவர். எவ்வளவோ ஸம்பாத்தியம் அவர் செய்திருந்தபோதிலும் அவர் காலம் பெரும்பான்மையும் வறுமையிலேயே கழிந்ததெனலாம். கடைசியாக, அவர் திருவாரூரில் குரோதன வருஷம் சித்திரை மாதம் 13-ம் தேதியில் கடவுள்பத மடைந்தார். அதுசமயம் அவரது மாணவர் திலகம் ஸ்ரீமான் க. வீ. சந்தான கிருஷ்ண நாயுடு அவர்கள் அவரது பிரிவாற்றாது கூறிய பாடல்களில் இரண்டை மட்டும் இங்கு தருகிறோம்.

நாமணக்கச் செவிமணக்க நல்லவண்ணப் பாமணக்க நவிலுங்கீர்த்தி
பூமணக்கு முடிமலையிற் புகழ்மணக்கப் பிறந்தவனி பூண்டபின்பு
தேமணக்குந் தமிழ்ப்புலமை தெரியாத எவர்பூணைச் சென்றாய்கொல்லோ
மாமணக்கும் புயவேந்தர் வரிசைபெறு சரபகவி மாகூறியோனே !

மல்லாருந் தார்வேந்தர் வாழ்த்துமுத்து சாமிகவி மறைந்தபின்பிங்
கெல்லாரு மெய்ப்புலவர் எல்லாருஞ் சொற்கவிஞர் இசையசந்தங்
கல்லாரும் பண்டிதர்கள் கைத்தாரு மின்பரஸ கானசீலர்
அல்லாடு நாடகத்தி லாயிரம்பேர் குருபூஜைக் கமர்வான்றே !

---

90. விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும் விழைமங்கை செய்யிலழகாம்.

## II

## ஸ்ரீஹரிக் கண்ணி

(முதல் சஞ்சிகை 618-ம் பக்கத் தொடர்ச்சி.)

73. தாவியருகணையச் சத்தியிலேற்குன்றனை
ஆவித்துணையாயீந் தாதரிப்பாய் ஸ்ரீஹரியே.

74. மாயாப்பிரபஞ்ச மயக்கத்திலே யழுந்தி
நாயாய்த்தினந்தோறு நானலைந்தேன் ஸ்ரீஹரியே.

75. நாயிற்கடையேனை நல்வழியிற் சேர்ப்பதற்குத்
தாயாமுனைத்தொழுதேன் தள்ளாதே ஸ்ரீஹரியே.

76. தள்ளாமலாதரித்துன் றாள்சேவைத் தந்தெனையு
நல்லாருடன் சேர்த்து நன்கருள்வாய் ஸ்ரீஹரியே.

77. நலம்புரிந்தேயாண்டுகொண்டு நற்கதிக்காளாக்கிக்
கலங்காதே யென்றனையுங் காப்பாய் ஸ்ரீஹரியே.

78. உடம்பெடுத்தநாளா யுனைநினையேனென்றே
அடம்பண்ணாதேயாண் டருளுவாய் ஸ்ரீஹரியே.

79. அடஞ்செய்தகற்றி லடிமையானுய்ய
இடம்வேறுதானுளதோ வென்செய்வேன் ஸ்ரீஹரியே.

80. ஆதலாலெனை யகலவிடாதேகாத்துப்
பாதகனானாலும் பலனருள்வாய் ஸ்ரீஹரியே.

81. கல்லாதவரின் கடையானபாவியெற்கு
னல்லபதந்தந்து நரகைத்தவிர்ப்பாய் ஸ்ரீஹரியே. (தொடரும்.)

தஞ்சை. சங்கு. இராமசாமி நாயுடு.

### உற்சாகம்-ஆநந்தம்

உற்சாகம் வேறு. ஆநந்தம் வேறு. ஒரு காரியத்தைத் தொடங்குகையில் உற்சாகம். அது இனிது கூடிமுடிகையில் ஆநந்தமாம். ஒரு புதியநேசம்-காதல் எவ்வளவோ உற்சாகமாயிருக்கிறது. இது துவக்கத்திலுள்ள தன்மை. ஆனால் அமைப்பு எவ்விதம் இருக்கிறதோ ? அது பிறகு கண்டறிய வேண்டிய விஷயம். அது துன்பமாய் முடியின் முதலிற்கொண்ட உற்சாகமெல்லாம் வீணாகின்றது. இன்பமாய் அமைந்திடிலோ அப்போதுதான் ஆநந்தத்தை அநுபவம் செய்யலாம். அது அவரவர்தம் அதிர்ஷ்டத்திற் கேற்றபடியாம்.

---

91. காணரிய பெரியோர்கடெரிசனம் லபிப்பதே கண்ணிணைகள் செய் புண்ணியம்.

# ஓர் முறையீடு

உலகில் ஒவ்வொருவரும் பலர்மெச்சவாழ வேண்டுமென்றே கருதுகின்றனர். ஆனால் ஒவ்வொருவரும் அதற்காகச் செய்யும் செய்கைகள், எண்ணும் எண்ணங்கள் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. சிலர் கல்வியாலும், சிலர் செல்வத்தாலும், வேறு சிலர் உடல் வலியாலும் தம்மை வெளிக்குக் காட்டிக் கொள்ள முயல்கின்றார்கள். தீயசெய்கையினாலும் தம்மைப் பிரசித்தப் படுத்திக் கொள்ள விரும்புபவர் எத்தனைபெயர்? ஆனால் இவர்கள் எல்லோருக்கும் முக்கியமாக வேண்டியது ஒன்று ; அதுதான் உலக அநுபவம். உலக அநுபவமில்லாவிடின், ஒருவன் எந்த விஷயத்திலாயினும், எவ்வளவு வல்லமை சாலியா யிருப்பினுங்கூட, அவன் தனது வாழ்க்கையாகிய வழுக்கல் பாறையில் சருக்கி விழவே நேரிடும்.

ஒருவன் நுனி மரத்திலிருந்து கொண்டு அடிமரத்தை வெட்டினான் என்பதும்; நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்று நெய்யுள்ள தொன்னையை ஒரு தார்க்கிகன் கவிழ்த்துப் பார்த்தான் என்பதும் எதைக் குறிப்பிடுகின்றது? அநுபவஞானம் இல்லாததையல்லவா? "பலகற்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் அறிவிலாதார்" என்பது நமது தமிழ்வேதம். ஆகவே ஒவ்வொருவருக்கும் அநுபவ ஞானம் எவ்வளவு இன்றியமையாதது எனப் புலப்படுகிறது. இந்த அறிவைப் பள்ளிக்கூடத்தில் படிப்பது மூலமாக அடையமுடியாது. ஒவ்வொருவரும் தத்தமது வாழ்க்கையில் நேரிடுகிற சம்பவங்களும், அதனால் கற்றுக்கொள்ளுகிற படிப்பினையுமே "அநுபவஞானம்" என்பது. "குருவிக்குத் தகுந்த ராமசரம்" என்பதுபோல அவரவருடைய வாழ்க்கைக்குத் தகுந்தபடி அநுபவ அறிவு சிறிதும் பெரிதுமாக இருக்கலாம். ஆனால் பரந்து கிடக்கும் இந்த நிலவுலகத்தில், ஒரேநாளில் ஆயிரக்கணக்கான மைல் பிரயாணஞ் செய்ய வசதி யேற்பட்டுள்ள இந்த நாளிலே, பலவித மக்களோடு பரிசயம் ஏற்பட நேரிட்டுள்ள இந்தக் காலத்தில் நமக்கு விரிந்த அநுபவ ஞானம் வேண்டாமா? அதற்கு "ஆநந்த குணபோதினி"யே ஏற்ற சாதனம். கடந்த பன்னிரண்டு மாதப் பத்திரிகைகளைப் படித்தவர்கள், நாம் கூறுவது முகஸ்துதியல்ல, முழுதும் உண்மையென்றே அறிவர். காலத்திற்கேற்ற உதவி புரிந்துவரும் நமது ஆசிரியர்க்கும்; அவரது, அநுபவஞான அமுதினைப் புத்தகவடிவமாக்கித் தரும் அதிபருக்கும் நாம் ஊக்கமும் உற்சாகமும் அளித்தல் வேண்டாமா? எங்ஙனம் அளிப்பது? ஒரு ரூபா சந்தாவை இரண்டு ரூபாயாகக் கொடுத்தா? வாய் வேதாந்தம் எளிது தான்; அது வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் நம்மாலியன்றவரை நமக்குத்தெரிந்த இருவரையோ மூவரையோ புது சந்தாதாராகச் சேர்த்துக் கொடுக்க இயலாதா? நமக்கு உற்சாகத்தைக் கொடுக்கும் "ஆநந்தனு"க்கு நாம் உற்சாகம் அளித்தல் வேண்டாமா? சகோதரர்களே! உங்களைத் தாழ்ந்து கேட்டுக் கொள்ளுகிறேன். வாய்ப்பேச்சோடு நில்லாது காரியத்தில் காட்டவேண்டுகிறேன்.

பெ. இராமாநுஜ ரெட்டியார்.



# சென்றமாதம்

**காங்கிரஸ் தலைவர்களுள் பரஸ்பர நிந்தனை.**

காங்கிரஸின் மூலமாய் இராஜ்ய நிர்வாக ஸ்வதந்திரங்களையடையலாமென்பது அதைத் தோற்றுவித்த அக்காலத்திய மேதாவிகளின் கருத்து. இப்போதுள்ளவர்களின் கருத்தும் அப்படியே. இதுவரை அதிக நன்மைகள் விளையாவிடினும், சில நன்மைகளேனும் கிடைத்திருப்பது உண்மை. காங்கிரஸ் மகாசபையில் நிறைவேறிய ஒரு தீர்மானம் அடுத்த நிமிஷத்தில் இந்தியா முழுமைக்கும் அமுலுக்குவந்து யாவரும் அநுஷ்டிக்கும்படியான விதமாக மகாத்மா ஆளுகை செலுத்திய காலமும் ஒன்றிருந்தது. இப்போதுள்ள ஜனத்தலைவர்கள் ஐக்கியபாவமின்றி பரஸ்பரம் ஒருவரையொருவர் விரோதித்து ஊழல்களை வெளிப்படுத்துகின்றனர். இப்படியின்றி ஒற்றுமையோடும் நம்பிக்கையோடும் புனிதமான தேச கைங்கர்யம் செய்யத் தொடங்கும் பாக்கியம் இவ்வருஷ முடிவில் சென்னையிற் கூடும் காங்கிரஸிலேனும்விளையுமா என்பதுகேள்வி. ஒன்றுபடுவதிலுள்ள நன்மை பிரிவினைப்படுவதில் ஒருபோதும்நேராது.

***

**மூவகைப் போக்கு.**

காங்கிரஸ் அபிமானிகள் கேட்கும் ஸ்வதந்திரங்களைத் தரகவர்ன்மெண்டார் இன்னும் பக்குவகாலம் வரவில்லையென்கின்றனர். ஸாமான்ய ஜனங்களோ எவருக்கு வந்த விருந்தோவென நினைத்துக் காங்கிரஸ் அங்கத்தினர்களுடன் உழைக்க இணங்குவதில்லை. அவர்கள் தங்களின் காலக்ஷேப கஷ்டத்திலேயே சிந்தையை யூன்றி யிருக்கின்றனர். இவர்களுக்குப் பக்குவம் போதாதென்று இவர்களை ஜனத்தலைவர்கள் உதறிவிட்டு ஆங்கிலம் தெரிந்தோர் மட்டுடனேயே குலாவிக் கொண்டு ஆங்கிலத்தில் பிரஸங்க வர்ஷம் வருஷிக்கின்றார்கள். இம் மூவகையினரும் மூன்று வழி!

***

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.**

காங்கிரஸ் மகா ஸபையில் பிளவு நேரக்கூடாதென் பதே எல்லோருடையவும் விருப்பம். காங்கிரஸ் ஸபையோ தேசத்துக்குப் பிரதிநிதியானது. அதில் பிளவு நேர்ந்தால், தேசத்தில் இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டுச் சிதைவுறும். ஏற்கெனவே மூன்றே முக்கால் மனிதர்கள் ஸர்க்கார் தயவையும், பட்டங்களையும், உத்தியோகங்களையும், மற்ற ரஹஸ்ய உதவிகளையும் எதிர்பார்த்தோ, அல்லது ஸர்க்காருக்குக் கோபம் வரும்படி நடந்தால் ஸர்வ நாச மேற்பட்டுவிடுமென்ற விசித்திரமான பயத்தாலோ மிதவாத கோஷ்டியென்றும், அதிகாரி பக்தி கக்ஷியென்றும் பலவித நாமங்கள் பூண்டு, புயற்காற்றை யெதிர்த்தொரு பூனை கத்துவது போலே, உலக முழுமையிலும் ஓங்கி நிற்கும் விடுதலைக் கொள்கையை

எதிர்த்து வேலைசெய்ய முயன்று வருகிறார்கள். ஆனால், அவர்கள் பொருட் பற்றித் தக்கோரல்லர். தொகையிலும், தைரியத்திலும், தைர்யத்தால் விளையும் செய்கைத் திறமையிலும் மிக, மிகக் குறைந்தவர்கள். ஆதலால், நாம் அவர்களைக் கவனிக்க வேண்டியதில்லை. ஆனால், இந்தியா முழுமையின் அறிவுக்கும், ஆசைக்கும், ஆண்மைக்கும் நேரான பிரதிநிதிகளடங்கிய காங்கிரஸ் ஸபையில் பிளவுதோன்றினால் காரியம் அறவேகெட்டுப்போய்விடும். இப்பொழுது ஜனத்தலைவர்களுக்குள் நேர்ந்துள்ள பிளவு காங்கிரஸ் ஸபையையும் பீடித்துவிடக் கூடாது. ஒற்றுமையால் ஸ்வராஜ்யம் நிச்சயமேற்படுமென்பதை ஆங்கிலேய அதிகாரிகளுட்பட அனைவரு முணர்வார்கள். ஆதலின், பரஸ்பர நிந்தனைகளை விடுத்து ஒன்றுபடுதலே தோசோன்னதிக்கு மார்க்கமாம்.

***

**ஒற்றுமையைப் பற்றி ஸீலி பண்டிதரின் கருத்து.**

நம்முள் ஒற்றுமை தோன்றினால் ஸ்வராஜ்யம்கிடைப்பது நிச்சயமென்பதை விளக்கும் பொருட்டுக் கீர்த்தி பெற்ற ஆங்கிலப் பண்டிதர் ஒருவரின் ஸாக்ஷ்யத்தை எடுத்துக் கூறுவோம். ஸர். ஜே. ஆர். ஸீலி என்பவர் கேம்ப்ரிட்ஜ் ஸர்வ கலாசாலையில் சரித்திர ஆசிரியராக இருந்தவர். இவர் "இயற்கையின் மதம்" என்றும், "எக்கே ஹோமோ?" என்றும் இரண்டு புகழ்படைத்த ஸமய நூல்களை எழுதியிருப்பது மன்றி, 1885-ஆம் ஆண்டில் (இன்றைக்கு 42-வருஷங்களுக்கு முன்னே) "இங்கிலாந்தின் பரவுதல்" என்ற நூலொன்றும் பிரசுரம் செய்தார். அதில் அவர் எழுதியிருக்கும் பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்:—

"இனி,........அந்த இருபது கோடி ஹிந்துக்களும் (தேசீய உணர்ச்சிபெற்று) நாம் அனைவரும் ஒரே தேசத்தார் என்ற கருத்துடன் ஒரே விதமாக யோசிக்கும் இயல்புடையவராக இருந்தால், (அந்நாட்டில்) நமது ஆட்சி நடப்பது ஆச்சர்யத்துக்கிடமான செய்தி யாகும். அங்ஙன மில்லாத இடத்தே, நமது ஆட்சியில் ஆச்சரியப் படத்தக்கவிஷயம் எதுவு மில்லை. பொது உணர்ச்சிகளும், பொது விருப்பங்களு மில்லாத தனித்தனி மனிதரின் வெறுங் கூட்டத்தை அடக்குதல் எளிது. எங்ஙனமெனில், அவர்களே ஒருவருக்கொருவர் விரோதம்செய்யும்படி நேர்ந்துவிடுதல் சுலபம். ஹிந்துக்களை ஒன்றுபடுத்தும் கட்டுகள் பல ஹீனமானவை" என்கிறார். இந்தியர்களுக்குள்ளே நாம் ஒற்றைத் தேசத்தார் என்ற உணர்ச்சி எந்தநிமிஷம் ஏற்படுமோ, அந்த நிமிஷமே இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம்தந்ததாகவேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் தேசீய ஐக்யஞானம் ஏற்பட்டமாத்திரத்தில் இந்தியாவுக்கு ஸ்வதந்த்ரம் உண்டாய் விடுமென்றும், அங்ஙனம் உண்டாகாமல் தடுப்பது ஸாத்யமே யில்லையென்றும் அந்த ஆசிரியர் மிகத் தெளிவாக நிரூபித்திருக்கிறார். ஸீலி பண்டிதர் மேலேசொல்லிய ஒற்றுமை யுணர்ச்சியை நாம் அடைதற் பொருட்டாக, "ஒருவருக்கொருவர் விரோதம் செய்யும்படி நேர்ந்துவிடுத"லான அம்ஸங்களை அகற்றிவிட்டு நம்முள் ஒன்றுபடக்கடவோம். இந்த ஒற்றுமைக்குப் பின்னமான விஷயம் எத்துணைப் பெரியதாயிருப்பினும் அதனை அலக்ஷியம் செய்து தகர்த்துவிட்டும், அவற்றிற்குச் செவி கொடாமலும் விலகி தேசீய ஐக்கிய ஞானத்தையே நமது திருஷ்டியாகப் பாராட்டக்கடவோம். அப்போதுதான் மதிப்பு எய்தும். ஸ்வராஜ்ய பாதையும் இதுவே.

94. தாராளமாகக் கொடுக்குந் தியாகிக டமக்கு நற்பொரு டுரும்பு.



***

**ஸ்ரீமான் சாஸ்திரிகள்.**

கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு இந்தியாவின் ஏஜண்டாக நியமனம் பெற்றுத் தென்னாப்பிரிக்காவுக்குப் பிரயாணமானார். அவரைப் பொறுத்தமட்டில் ஏற்பட்ட அதிர்ஷ்ட சக்கரத்தில் நூற்றிலொரு பாதியேனும் தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு அவரால் ஏற்படுமாயின் சிலாக்கியமே. ஸ்ரீமான் சாஸ்திரிகள் மிக்க யோகசாலி. அதைக் குறித்து நாம் ஸந்தோஷப்பட்டுக்கொள்ளலாம்.

***

**கௌரவார்ஹமான தீர்ப்பு.**

சென்னையில் தொழிலாளரின் தலைவரான ஸ்ரீமான் எம். சிங்காரவேலு செட்டியார் தொழிலாளரைப் பலாத்காரத்தில் இறங்கும்படித் தூண்டிக் கிளர்ச்சியான பிரஸங்கங்கள் செய்ததாய் அவர்மீது வந்த வழக்கில், சென்னை சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட் மிகுகௌரவமான தீர்ப்பு கூறினார். ஸ்ரீமான் செட்டியார் தாம் இனி பலாத்கார பிரசங்கமெதுவும் செய்வதில்லையென்று தெரிவித்துக்கொண்டார். "கௌரவமான ஒருவர் கோர்ட்டில் சொல்லியுள்ள வாக்குமூலமே முச்சலிக்காவுக்குச் சமானமாகக்கூறலாம்" என்று நீதியதிபர் கூறிவிட்டு, அவர் மீது எவ்வித நடவடிக்கையையும் நடத்தாமல் நிறுத்திக்கொண்டார். இது போற்றற்பாலது.

***

**கௌரவப் பட்டங்கள்.**

சக்கரவர்த்தியார் பிறந்தநாளன்று இந்தியாவில் பலருக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன. ஆனால் பட்டங்கள் மிகக் கொஞ்சமாகவே இருந்தன. முதலாவது நெப்போலியன் எவ்வித பிசகு செய்தவனாயினும் உலக சுபாவத்தை நன்றாயறிந்தவன் என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை. ஒரு நாள் நெப்போலியன் சாயந்திரவேளையில் ஏகாந்தமா யுட்கார்ந்திருக்கையில் கோயிலில் கண்டாமணி சப்திப்பதைக் கேட்டு, மதமும், கௌரவப் பட்டங்களும் மனுஷ்யர்களை அடக்கியாளும் முக்கிய கருவிகள் என்றான். அவரது வாசகம் வெகு உண்மை. பட்டங்களுக்கு விலை யில்லையென்று அநேகர் எண்ணுகின்றனர். கௌரவப் பட்டங்களை ஒருவர் பெறுவதால் அதிக பெருமை எப்படி உண்டாகுமென்பது பலரின் கேள்வி. எவ்வளவு பட்டங்களைக் கொண்டாலும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். பட்டம் பெற்றவருக்குப் பணச்செலவுண்டு. பட்டம் பெறாதவர்க்கு அஃதில்லை. பட்டம் பெற்றவர் ஏதேனும் ஒரு வழக்கில் அகப்பட்டுக்கொண்டால் நல்ல வேட்டையகப்பட்டதென்று அவரைச் சுற்றிக் கொள்ளுகின்றனர். அவர் பெரிய பட்டக்காரராயிற்றே யென்று அப்போது நினைப்பதில்லை. இத்துடன்

95. தன்னுயிரை யெண்ணுத சூரனுக்கெதிராளி தனமெலா மொருதுரும்பு?

எந்தக் கூட்டத்திலேனும் பட்டக்காரர் வந்து சந்தாவுக்காகக் கையெழுத்திடாவிட்டால் அவரிடம் அப்பிரீதி ஜனிக்கிறது. தேசாதிபதிகளின் வரவைக் கொண்டாடுவதற்காகப் பட்டக்காரர்களே பணச்செலவு செய்யவேண்டும். முன்பு ஆனரபின் கோக்கலே அவர்கட்குத் துரைத்தனத்தார் விசேஷ பட்டங்களை வழங்க இருந்த ஸமயம், அதிக கௌரவப் பட்டங்களால் தாம் சாமான்ய ஜனங்களிடம் சாதாரணமாய்ப் பழகுவதற்கு முடியாமற்போய் விடுமென்று தெரிவித்து விநயபூர்வமாய் மறுத்ததாகவும் பிரஸ்தாபம். தேசீயக் கிளர்ச்சியின்போது அந்த ஆவேசத்தில் பட்டங்களை வெறுத்துத் துறந்தவர்களும் பலராவர்.

## வெளி நாடுகளிலுள்ள சந்தாதார்களுக்கு.

வெளி நாடுகளிலுள்ள சந்தாதார்களிற் பெரும்பான்மையோர் புது வருஷ சந்தாவை அனுப்பிவிட்டனர். அவர்களுக்கெல்லாம் சித்திரைமாத சஞ்சிகைமுதல் சேர்த்து அனுப்பியிருக்கிறோம். இரண்டொருவர் தங்கட்கு வி. பி. வருமென்று எதிர்பார்த்துத் தாமதித்துப்பின் வராமையால் சந்தாவை மணியாடர் செய்ததாக எழுதியிருக்கின்றனர்., வெளி நாடுகளுக்கு வி. பி. சட்டம் இல்லாமையால் பத்திரிகையை வி. பி. யில் அனுப்பக் கூடவில்லை. அவர்களின் சென்ற வருஷத்திய சந்தா முடிந்தவுடன் அவ்வளவில் பத்திரிகையும் அவர்களுக்கு வராது நின்று போயிருக்கலாம். ஆகவே, அவர்கள் இதைக் கவனித்துப் புது வருஷசந்தாவை உடனே அனுப்பிக்கொடுத்துத் தொடர்ச்சியாகப் பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டு ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

பத்திராசிரியர்.

---

உத்தமர்கள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் ஆளுகையைச் சிலாகிப்பர். ஆனால் கலகக்காரர்கட்கும் கொள்ளையடிப்போருக்கும் கள்வருக்கும் இந்த அரசாக்ஷி கெடுதலாய்த் தோன்றும். அந்த துஷ்டர்களெல்லாம் பிரிட்டிஷாரின் ஆளுகை கெடுதல் என்றுதான் சொல்லுவார்கள். அத்தனை திருடர்களும் தங்களை உலகம் உலகம் என்றுசொல்லிக்கொள்வதுஎப்படி அர்த்தமில்லாதவிஷயமாகிறதோ, அப்படியே அவிவேகிகளான பலர் கூடி ஒருவன் அனுஸரிக்கும் வழியைக் கெடுதல் என்று கூறுவதும் பயனற்றதாகும். அந்த வார்த்தைக்கு மதிப்பே இல்லை. புத்திசாலிகள் நற்கருமம் இன்னதென்பதை உணர்ந்து கொண்டபோதிலும், அதை நிறைவேற்ற முயல்வதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழி உத்தமமாய்ப் படுகிறது. மத விஷயத்திலும் இப்படியே. ஆதலின் எவரையும், எந்த மதத்தையும் இகழுவது சரியல்லவென்கிறோம்.

---

96. போனபெரியருக் கற்பாது கையினிற் பிரயோசனந் துரும்பு.

## பழமொழிக் குறிப்புகள்

### 1. அன்பு.

(151-ம் பக்கத் தொடர்ச்சி.)

**59. உருவத்தினாலல்ல இன்பப் பேச்சினால் கிளி நன்கு மதிக்கப்படும்.**

அன்பும் இனிய வார்த்தையும் அவ்வளவு கௌரவத்திற்குக் காரணம் என்றபடி. இந்தப்பழமொழியை அன்பின்கீழ் கூறியதற்குக் காரணம் இனிய வார்த்தையானது அன்பு வளரும் தோட்டமாயிருப்பதே. ஆகையால் இங்கு இதைச் சொல்லலாயிற்று. கிளியைவிட உருவத்திலும் வருணத்திலும் வெகு விசித்திரமான பறவைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளின் சங்கியை ஆயிரக்கணக்கு. அப்படியிருந்தபோதிலும் இனியபேச்சு கிளியிடமிருப்பதால் ஜனங்கள் இப்பறவையைப் புகழுகிறார்கள். சிற்சிலர் அபிமானித்து வளர்க்கிறார்கள். பட்சிக்கே இனிய பேச்சால் இவ்வளவு மரியாதை இருக்கும்போது, மனிதனிடம் அன்புமயமான குளிர்ந்த பேச்சு இருந்தால் எவ்வளவு மேன்மையடைய மாட்டான் என்பது கருத்து. அன்புள்ள இடத்தில் இனிய சொல் தானே தோன்றும்.

**60. உருசிகண்ட பூனை உறியைத் தாவுமாம்.**

இது உண்மையான பழமொழி. ஒருவர் ஒருகாலத்தில் மிக்க அன்புடையவராக இருந்திருக்கலாம். ஒருகணமும் விட்டுப்பிரியாத மனதும் கொண்டிருக்கலாம். பிரியும் காலத்தில் எவ்வளவோ கண்ணீர் விட்டு அழுதிருக்கலாம். ரயில்வே ஸ்டேஷனில் பெருமூச்சுவிட்டு ஏங்கியிருக்கலாம். அத்தகையோர் மற்றொரு காலத்தில் அன்பு மாறி அன்னியராகப் போய்விடுகிறார்கள். ஒப்புக்குமட்டும் அன்புடையோர் போல் நடிப்போராகவும் ஆகின்றனர். ஆயினும், அவர்களிடம் பழகிய அன்புள்ளவர்களோ பழய நாள் அன்பை நினைத்துக்கொண்டு, அந்தப் பழய ருசி கண்ட தன்மையில் மறுபடியும் மறுபடியும் அவர்களையே சுற்றிக்கொண்டு நிற்க ஆசைப்படுகிறார்கள். அவர்களிடம் அன்பு சற்றும் இல்லையென்று தெரிந்தாலும் அவர்களிடம் இவர்கள் வைத்துவிட்ட அன்பு அவர்களைவிட்டுப் பிரிய முடியாமல் ருசி கண்ட பூனையைப் போலப் பின்னும் பின்னும் அவர்களிடமே போகவைக்கிறது. ஆனாலும் என்ன, அவர்களோ பழய அன்பைக் காட்டுவோராகக் காணோம்! இது ஒரு பெரிய பரிதாபமான நிலைதான். "வா வென்பாருமில்லை, வரிசையிடுவாருமில்லை" என்பதாகக் குணத்தில் முற்றிலும் மாறுபட்டுப்போகிறார்கள்.

---

97. பெரிதான மோக்ஷசிந்தனை யுள்ளவர்க்கெலாம் பெண்போக மொரு துரும்பு.

### 61. உருவத்தையல்ல குணத்தைப் பார், பணத்தையல்ல சனத்தைப் பார்.

இது நல்ல புத்திபோதனையான பழமொழி. சிலர் அழகையும் ரூப சௌந்தரியங்களையும் மதித்து அன்புவைக்க முற்படுகிறார்கள். ஆனால் அந்த அழகானவர்களோ உள்ளுக்குக் கபடிகளாய், உள்ளத்திலொன்றும் உதட்டிலொன்றுமானவர்களாய் வெளிக்குமட்டுமே அன்புணர்த்துவோராகவும், பிறகு நம்மையே பல இடங்களில் தூற்றி நமது மானத்தைக் கெடுப்போராகவும் முடிகிறார்கள். ஆகவே அழகு இருக்குமிடத்தில் அன்பும் இருக்குமென்று ஏமாறிப்போகாதே யென்று இந்தப்பழமொழி எச்சரிக்கிறது. பின் என்ன செய்யவேண்டுமென்றால், 'குணத்தைப் பார்' என்று இப்பழமொழி வற்புறுத்துகிறது. அழகற்று நின்றாலும் குணத்தில் உயர்ந்து பிரகாசிக்கலாம். குணம் பெரிதே தவிர அழகு பெரிதல்ல. குணத்தால் ஒருவரை மதிக்க வேண்டுமேதவிர அழகினால் மதித்து ஏமாறலாகாதென்பது இப்பழமொழியின் கருத்து. அழகைக்கண்டு அன்பு உண்டென்று மதித்து எவ்வளவு குடும்பங்கள் கெட்டுவிட்டன என்பதை அவரவரே தத்தம் அநுபவத்தில் நிதானித்துப் பார்த்துக்கொள்ளட்டும். அழகினள் என்று ஒருதாசியை மதித்து அவளிடத்து அன்பு உண்டென்று மயங்கி அதனால் குடிமுழுகிப் போனவர்கள் எத்தனை பேர்? ஆடவரின் அழகைக்கண்டு மயங்கி குடும்பத்தை விட்டு வெளியேறிக் கெட்ட பெண்கள் எத்தனை பேர்? ஆதலின் உருவத்தையல்ல குணத்தைப் பார் என்று இப்பழமொழி வற்புறுத்துகிறது. இவ்விதமே பணக்காரர்கள் என்கிற காரணத்தால் அவர்களிடம் விசேஷித்த அன்பை வைத்து அவர்கள் தங்களுக்கு வாழுளெல்லாம் உதவியா யிருப்பார்களென்றும், தங்களுக்குத் துணையாக நின்று உதவுவார்களென்றும், தங்களின் குமார்த்திகளை மணம் புரிவிப்பார்களென்றும், நல்ல இடத்தில் தங்களுக்கு விவாகம் செய்விப்பார்களென்றும் இன்னும் என்னவோ ஆசைகளுக்கெல்லாம் இடங் கொடுத்துக் கொண்டு முடிவில் ஏமாறுகிறார்கள். அவ்விதமெல்லாம் ஏமாறாதே யென்றும், பணத்தை யல்ல சனத்தைப் பார் என்றும் இப்பழமொழி சொல்லுகிறது. பணக்காரரா யில்லாவிட்டாலும் உண்மையான அன்பு கொண்ட தங்களின் சொந்த ஜனமாக இருந்தால் அந்த அன்புக்காகவே அந்த சொந்த ஜனத்தை நம்பி அவர்களிடம் விஸ்வாசம் வை என்பது இப்பழமொழியின் கருத்து.

### 62. உலகிலே பெண் என்றால் பேயும் இரங்கும்.

ஏன் இரங்கும்? பெண்ணுருவே அன்பின் பிறப்புக்கு ஜன்மஸ்தானமாக இருப்பதால்தான். முதன் முதலாக ஒருவன் இவ்வுலகிலே பிறந்திட்டபோது தெரிந்துகொள்ளுகிற முதல் அன்பு எது? தாயின் அன்பே. மற்றவர் ஆயிரம் பேர் சூழ்ந்திருப்பினும், தன் மானத்தின் இடமாக மதித்துக் கச்சையணிந்து மறைத்துவைத்திருந்த மார்பகத்தைத் திறந்து கூகூ என்று பாலுக்காக அழும் குழந்தையின் வாயில்வைத்து அதற்கு இன்னமுதூட்டுவதில் தன் நாணத்தைக்கூட மறந்துவிடுகிற அந்த ஒருதாயின் அன்புக்கு ஈடு நிகர் இவ்வுலகத்தில் காணமுடியுமோ? அதன்பின் ஸகோதரிகள் என்ற வகையில் தன் உடன்பிறப்பாகத் தோன்றும் பெண்ணுருவங்களின் அன்பும், அந்தத் துணையின் இனிப்பும், அதனால் எய்தும் ஆழ்ந்த பரவசமும் பகரற்பாற்றோ? அவ்விதமே பாட்டி, அத்தைபோன்ற இரத்த சம்பந்தம் கொண்டவர்களிடமிருந்து உலகினர் அன்பின் சுவையை எத்தனை விதங்களில் அறிந்து இன்புறுகிறார்கள். அதற்குப் பின் மனைவியாகவும், இனிய புத்திரிகளாகவும் தோன்றும் பெண்ணுருவங்களினது பற்றுதலும் அன்பும் இதுகாறும் சுவைத்திராத ஒரு தனியான புது ருசிகரமா யிருக்கின்றது. இவ்விதமே நெடுகப் பெண்ணுருவே அன்புக்கு ஊற்றாக இருப்பதால் துன்மார்க்கத்தனமான சேஷ்டையுள்ள பேய்கூட தனது தீய குணத்தை விட்டுவிட்டு பெண்ணின் அன்பில் அதன் பரிதாபத்தில் மயங்கிப்போய்விடும் என்பது இப்பழமொழியின் தாத்பரியமாகும்.

### 63. உலுத்தன் விருந்துக்கு ஒப்பானது ஒன்றுமில்லை.

அன்பற்றவர்களின் சங்கதியும் அப்படித்தான். என்ன உட்பட்டு நடந்தாலும் உலுத்தன் தன் பணத்தைக்கொண்டு உதவி சாதிக்கப்போகிறதொன்றுமில்லை. அவ்விதமே அன்பற்றவர்களும் நாம் அவர்களுக்கு ஆயிரம் விதங்களில் நல்ல தன்மையாக நடந்துகொண்டு நமது அன்பை எவ்வளவுக்கு உணர்த்திக்கொண்டாலும் அவர்கள் தங்களை உள்ளூர அன்பினர்களாய் உணர்த்திக்கொள்ள மாட்டார்கள். இதை,

### 64. உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?

என்ற பழமொழியாலேயே அறிந்து கொள்ளலாம். அன்பற்றவர்களின் தன்மை எவ்வளவு மறைத்தாலும் வெளிப்பட்டுப்போய்விடும். அவர்களின் ஒப்பு உபசாரங்களெல்லாம் பின்னுக்குப் பட்டப்பகல்போல் துலங்கிவிடும். அன்புள்ள மாற்றாந்தாயையும் உலகம் அறிந்துதான் வைத்திருக்கிறது. அன்பற்ற வெளிநடிப்புள்ள மாற்றாந்தாயையும் உலகம் தெரிந்துகொள்ளாமலில்லை.

### 65. உலைவாய் மெழுகு உருகுவதுபோல்.

உள்ளபடியே அன்பிருந்தால் அது உலைவாயினிடத்து மெழுகு உருகுவதுபோல் உருகி தனது உள்ளத்தன்மையை உடனுக்குடனே காட்டிவிடும். அன்பில்லாத உள்ளமோ அவ்விதம் உருகாது. அதைப் பார்த்தளவிலேயே அதன் 'பவிசு' தெரிந்துபோம்.

### 66. 'சீ' என்ற வீட்டிலே பேயும் நுழையாது.

இது 38-வது பழமொழியான "இல்லை என்ற வீட்டில் பல்லியும் சோராது" என்ற பழமொழிக்கு சமானம். அன்பற்றாரை ஒருவரும் அணுகமாட்டார்களென்பது கருத்து.

### 67. நல்லாரை நாவில் உரை; பொன்னைக் கல்லில் உரை.

வெகுஅழகான பழமொழி. யார் நல்லவன் என்றுநாம் நமக்குள் அறிந்துகொள்ள வேண்டுமானால், நாம் அவன் பேசும் நயத்தால் தெரிந்துகொள்ளலாம். எவ்விதமாய்த் தங்கத்தின் மாத்தை அறிந்துகொள்ள உரைகல் ஏற்பட்டிருக்கிறதோ அதுபோல் ஒருவனின் நாக்கு அவனுடைய குணத்தை நல்லவன் எப்போதும் அன்பும் ஆதரவு த்துளெதுக்காட்டும் உரைகல்லாகும்.

---

98. தீரா த சகலமும் வெறுத்ததுற விக்குவிறல் சேர்வேந்த ரொரு துரும்பு.

99. செய்யகலை நாமகள் கடாக்ஷமுன்னோர்க் கெலாஞ் செந்தமிழ்க் கவி துரும்பாம்.

மாய்ப் பேசுவான். இவைகளைக்கொண்டு ஒருவனை நாம் எளிதில் உணர்ந்து கொள்ளமுடியும். நாம் ஒரு ஊருக்குப்போய் ஒருவர் வீட்டில் இறங்குகிறோம். நாம் வந்துவிட்டோமென்று உள்ளேபோய் ஒருவன் சொல்லுகிறான். அதைக் கேட்ட—அவர்கள், "ஆமாம்! நிறைந்து போச்சுது" என்று சலிப்போடு பதில் சொல்லிவிட்டு, வெளியில் வந்து நம்மை வாருங்கள் வாருங்கள் என்று வெகு பிரியமாய் அழைக்கிறார்கள். என்ன அழைத்துமென்ன? அவர்கள் உள்ளேயிருந்து சொன்ன வார்த்தையிலேயே அவர்களின் உள்ளத்தின் போக்கு விளங்கிவிட்டது. ஆகவே, அன்பை நாவினால் நன்கு அறியலாம்.

68. வாழ்வார்க்கு சீதேவி வாயிலே.

அதெப்படி யென்றால், அன்பால்தான். அன்பு தான் சீதேவி. அன்பான பேச்சிருந்தால் யாரும் வாழ்வார்கள். சீதேவி என்றால் ஸ்ரீ லட்சுமி. அன்பான குணமிருந்தால் லக்ஷ்மியின் பிரஸாதமும் உண்டு என்றபடி.

69. விசுவாசமிருந்தால் வேசியும் பிழைப்பாள்.

ஆமாம், அது உண்மை. பணத்தையே பெரிதாக மதித்து அதைக் கவர்ந்துகொண்டு துரத்திவிடுவது வேசிகளின் குலதர்மம். அத்தகைய வேசிகளுக்குக்கூட அன்புகாட்டும் தன்மை பிரதானமாயிருக்கவேண்டும். அவ்விதம் அன்பு இருப்பதாகக் காண்பித்துக்கொண்டால்தான் அவளிடத்து மற்றவர்களும் நெருங்கிக் குலாவுவார்கள். பிறகு சொத்துக்களை யெல்லாம் பறித்துக்கொண்டு ஒருவனைத் துரத்துகிற சங்கதி அப்பால் இருந்தாலுங்கூட, முதலில் அவனை வசியப்படுத்துவதற்கு அவள் அன்புள்ளவள் போலவேனும் நடித்துத்தான் ஆகவேண்டும். அவ்விதம் நடித்தே அவனை மயக்கவேண்டும். அவ்விதம் வெளியன்பாகவேனும் அவள் காண்பித்துக்கொள்ளாவிடில் அவள் பிழைப்பில் மண்விழுந்துவிடும். அன்பற்ற தாசிகூட அன்பை மதித்து அந்த அன்பு வேடம் பூண்டுதான் வயிறு வளர்க்கவேண்டுமென்றால், உண்மையிலேயே அன்புகொண்டுள்ள தாசிக்கு அவள் பிழைப்பைப்பற்றிக் கவலையே கொள்ளத் தேவையில்லை. அந்த அன்பே அவளுக்குக் கஞ்சி வார்க்கும். இதானது அன்பற்றவர்கூட அன்பு நடிப்பு நடிக்கவேண்டியிருக்கிற அன்பின் உயரிய தன்மையை எடுத்து விளக்குவதாகும். (தொடரும்)

## இருவர் கூடாது.

உன் வீட்டைச்சேர்ந்த ஒருவர் மற்றோர் வீட்டில் தங்கியிருக்கையில், நீயும் அந்த சமயம் அங்குபோய் உட்கார்ந்து கொள்ளாதே. அது அந்த வீட்டுக்குக் கனத்த பாரமாகத் தோற்றும். அவ்வீட்டினரே உன்னை 'அப்படிப் பேதம் எண்ணாதே' என்று கூறியழைப்பினும் நீ அங்கு தங்காதே. ஒரு வீட்டுக்கு ஒருவர்போனால் அது ஒரு சுமையாகப் படாது. இருவர் போனாலோ, அல்லது வேறு விருந்தினர் வந்திருக்கையில் போனாலோ—அது ஒரு பாரமாகப்படும்.

100. சிங்காரவனமதி லுதிப்பினுங் காகமது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ?

# நம்மாழ்வார் காலம்

(ஸ்ரீமான் து. அ. கோபிநாதராவ் அவர்களது ஆராய்ச்சியின் சங்கிரகம்.)

வைஷ்ணவ சமயத்திற்கு அச்சாணிபோன்றவரான ஸ்ரீஇராமாநுஜர் சுமார் கி.பி. 1055-ம் ஆண்டில் பிறந்து 82 பிராயம் ஜீவித்திருந்து ஏறக்குறைய கி. பி. 1137-ம் ஆண்டளவில் எம்பிரான் திருவடிச் சரணமடைந்தார். இராமாநுஜர் காஞ்சியிலமர்ந்து இல்லற வாழ்க்கையை முட்டின்றி நடத்திக்கொண்டிருக்கையில் அவர் வைபவங்களைக் கேள்வியுற்ற ஆளவந்தார் தமது புதல்வரான திருவரங்கப் பெருமாளரையரை அனுப்பி இராமாநுஜரை அழைக்க, அவரும் அவ்வாறே ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டனர். சுமார் 1080-ஆண்டில் இராமாநுஜர் ஸ்ரீரங்கம் வந்துசேரவும், துர்ப்பாக்கிய வசத்தால் ஆளவந்தார் காலஞ்சென்று ஒருவாரம் ஆயிற்றென்று கேட்டு ஆறாத்துயரமடைந்தனர்.

***

இவ்வாளவந்தார் ஸ்ரீமான் நாதமுனிகளின் பேரனாவர். இந் நாத முனிகள் அக்காலத்தில் காட்டுமன்னார் கோவில் என்று வழங்குகிற வீரநாராயணபுரத்தில் வசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது திருக்குடந்தையி லிருந்து அவ்வூருக்குச் சில பிராமணோத்தமர்கள் வந்து, நாதமுனிகள் கேட்பத் திருக்கோவிலிலே நின்று,

"ஆராவமுதேயடி யேனுடலநின்பா
லன்பாயே
நீராயலைந்து கரையவுருக்குகின்ற நெடு
மாலே
சீரார் செந்நெல் கவரிவீசுஞ் செழுநீர்
த்திருக்குடந்தை
ஏரார் கோலந் திகழக் கிடந்தாய்கண்
டேனெம்மானே"

என்ற பாசுர முதலாகவுள்ள 48-ம் திருவாய் மொழியைக் கனிந்துபாடினர். அப்பதிகத்தைக் கேட்டிரங்கிய நாதமுனிகள் "திருவடிகளுக்குத் திருவாய் மொழி ஆயிரமும் வருமோ?" என்று வினவினர். அதற்குப் பிராமணர்கள் "ஆயிரமும் வாராது, ஆயிரமும் தெரிந்து கொள்ளவேண்டின், திருக்குருகைக்குச் செல்லுமின்; அங்கே பராங்குச தாஸர் என்றொருவர் உள்ளார். அவரைக்கண்டு கேட்டால் திருவாய் மொழி ஆயிரத்தையும் அருளிச் செய்வார் என்றார்கள். அதனைக் கேட்டு நாதமுனிகள் திருவாய் மொழியைப் பெறக்கருதி, தாம் வயோதிகராய் இருந்தும் ஆசைமேலீட்டினால் தாம்பிர பரணி தீரத்தை நோக்கிச் சென்றனர். திருக்குருகையை யடுத்த ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்து அங்கே பராங்குச தாஸரைக் கண்டு நமஸ்கரித்துத் திருவாய் மொழியைப் பிரஸாதித்தருளும்படி வேண்டினர். பராங்குச தாஸரும் மனமிளகி "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் பாசுரங்களைப் போதித்து, ஆழ்வார் அருள் வழியைப் பற்றித் திருவாய் மொழியைச் சொல்லிக் கொடுத்தனர். திருவாய்

101. ஆண்மையாகிய நல்லகுடியிற் பிறந்தவ மசடர்பெரியோராவரோ?